Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, SEPTEMBER 11, 2021

சனிக்கிழமை செப்டெம்பர் 11, 2021 | ஒளி: 07 கதிர்: 98 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## சிறுவர்களுக்கு மட்டும் பைசரை ஒதுக்கவும்



ஆரம்பத்திலிருந்து 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விரைவாக தடுப்பூசி செலுத்தி பூரணப்படுத்த நாம் அரசாங்கத்திடம் கோரியிருந்தாலும் துரதிர்ஷ்டவசமாக அது உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே, அதில் ஏற்பட்ட தாமதத்தால் கடந்த காலங்களில் கொரோனா மரணங்கள் அதிகரித்திருந்தன என்றார். கொழும்பில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிக்கப்பட்டது;

# 21 க்குப் பின் கட்டுப்பாடுகளை ஆராயவும்



- உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு
- 100 மாணவர்களிலும் குறைவான பாடசாலைகளை திறப்பது குறித்து பரிசீலனை

செப்டெம்பர் 13ஆம் திகதி வரையிலும் அமலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம், செப்டெம்பர் 21ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுமாயின், எவ்வாறான கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்பது தொடர்பில் அறிக்கையை தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருக்கும் காலப்பகுதியில், மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள்,

தொடர்ச்சி P2



## பிரதமர் மஹிந்த இத்தாலிக்கு விஜயம்

இத்தாலிக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தூதுக் குழுவினர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று (10) அதிகாலை புறப்பட்டனர்.

இவ்விஜயத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜி20 சர்வமத மற்றும் கலாசார மாநாடு - 2021 இன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றவுள்ளார். அதன்பின்னர் இராஜதந்திர சந்திப்புகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

ஐ.நாவின் பொது

## சபைக்கு பாரியாருடன் ஜனாதிபதி பயணம்



அமெரிக்க, நியூயோர்க்கில் செப்டெம்பர்21ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதன்முறையாக கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர், சர்வதேச கூட்டத் தொடர் ஒன்றில் பங்கேற்கும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

தொடர்ச்சி P2



## ஜனாஸா தோண்டி எடுக்கப்பட்டது

ரஸீன் ரஸ்மின்

புத்தளம், வேப்பமடு பிரதேசத்திலுள்ள மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்ட 56 வயதுடைய நபர் ஒருவரின் ஜனாஸா புத்தளம் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் அசேல டி சில்வா முன்னிலையில் நேற்று (10) காலை தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.


தொடர்ச்சி P2

புலிகளின் குற்றங்களை விசாரிக்குமாறு

## ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பவே இல்லை

### சுமந்திரன் பதில்; பிரிந்தோ, தனித்தோ செயற்படவில்லை என்கிறார்

என்.ராஜ்



தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி ஒருபோதும் ஐ.நா அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார் .

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மத்திய வங்கியின் ஆளுநர் ஓய்வு



மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யூ டி லக்ஷ்மன், ஓய்வு பெறவுள்ளார். அவர் தனது இராஜினாமா கடிதத்தை செப்டெம்பர் 14ஆம் திகதியன்று கையளிக்கவுள்ளார்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் 2019 டிசெம்பர் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தனது புதிய பதவியின்

தொடர்ச்சி P2

## யாழில் ஒருவயது குழந்தை மரணம்

எம்.றொசாந்த்

யாழ். தெல்லிப்பழை வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஒரு வயதான குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. அக்குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது என சுகாதார பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை பெரியபுலம் பகுதியை சேர்ந்த ஒரு வயதான குழந்தை, காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

## பெண்ணின் சடலத்தை பார்த்ததால் சிக்கல்



யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவரின் சடலம் மல்லாவிக்கு கொண்டுவரப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், அச் சடலத்தை பொறுப்பேற்று தகனம் செய்யுமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த 81 வயதான பெண்ணின் சடலம் மல்லாவி பிரதேச வைத்திய சாலைக்கு,

தொடர்ச்சி P2



## யாசகரின் மனதில்....

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து சமூக இடைவெளியை பேணுமாறு சுகாதார வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருவருக்கு இடையில் ஒருமீற்றர் இடைவெளி பேணப்படவேண்டும். கொழும்பில் இருக்கும் யாசகர்களால் வாகனங்களுக்கு அருகில் செல்லமுடியாத நிலைமையில் உள்ளனர். அவ்வாறு சென்றாலும் சிலர், வாகனக் கண்ணாடிகளை இறக்குவதே இல்லை. இந்நிலையில்தான், கொழும்பில் உள்ள யாசகர் ஒருவர் வித்தியாசமான முறையில் சிந்தித்துள்ளார். (படம்: பிரதீப் பத்திரண)

## சமுர்த்தி உத்தியோகஸ்தர் கொரோனாவுக்கு மரணம்

ரஸீன் ரஸ்மின்

சுகவீனம் காரணமாக புத்தளம் தள வைத்தியசாலையில் கடந்த 8ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கற்பிட்டி பெரியகுடியிருப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான லாபிர் அலி (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## திக்குத்தெரியாமல் போன யுவதி வீட்டுக்கு திரும்பினார்

ஆ.ரமேஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா பிளான்டேசன் தோட்டத்திலிருந்து கடந்த (05) ஞாயிற்றுக்கிழமை தனது தாயுடன் கிக்கியாமலை காட்டுக்கு விறகு சேகரிக்கச் சென்றிருந்த நிலையில், காணாமல் போயிருந்த யுவதி, நேற்று முன்தினம் (09) மாலை வீடு திரும்பியுள்ளார்.

யுவதி காணாமற் போனமை தொடர்பில், அவரது பெற்றோர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், பொலிஸாரும்,

தொடர்ச்சி P2



## ரஞ்சனின் விடுதலையை எதிர்பார்க்கும் சஜித்

சிறைக்கைதிகளின் தேசிய தினம் செப்டெம்பர் 12ஆம் திகதியாகும். அன்றையதினம், எங்கள் அன்புமிக்கவரும், பிரபல நடிகரும் மக்கள் சார்பு அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்கவை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பளித்து விடுதலை செய்வார் என எதிர்பார்க்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தனது டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ளார்.

## நுவரெலியாவில் சனக்கூட்டம்

டி.சந்ரு



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டிருந்தாலும், நுவரெலியா நகரத்துக்கு நேற்று (10) வெள்ளிக்கிழமை பெருந்திரளான மக்கள் வருகைதந்திருந்தனர்.

வாகன நிறுத்துமிடங்களிலும் இட நெரிசல் காணப்பட்டது. நுவரெலியாவிலுள்ள அரச தனியார் வங்கிகள் நேற்று (10) காலை

தொடர்ச்சி P2



## சமலுக்கு கொரோனா

நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து அவர், தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.





## தான்தோன்றீஸ்வரர் மஹோற்சவம் இல்லை

வா.கிருஸ்ணா

இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகக் கருதப்படும் கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது இவ்வாண்டு நடைபெறமாட்டாது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பவே இல்லை

இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன், கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றோம் அது தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக கிடைத்தது அது அனைவரும் அறிந்த விடயமாகும்

ஆனால், தற்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு விஷமப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் விசாரிக்க கோரி சம்பந்தனால் ஆவணம் ஒன்று அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது. அது முற்றிலும் ஒரு பொய்யான விடயம்.

இந்த விடயத்தில் ஊடகங்களும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். அதாவது ஒரு விடயத்தை செய்தியாக பிரசுரிக்கும் போது அதனை ஆராய்ந்த பின் செய்தியாக பிரசுரிக்க வேண்டும். அத்தோடு தற்பொழுது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தமிழரசுக்கட்சி தனியாகச் செயற்படப்போகின்றது. கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செயற்படுகிறது என அவ்வாறான ஒரு சம்பவமும் இடம் பெறாது.

இலங்கை தமிழரசுக் கட்சியானது தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து எந்த காலத்திலும் செயற்படுமே தவிர ஒருபோதும் தனித்து செயற்படுவதற்கு தயாராக இல்லை என்றார்.

அதே போல எந்தளவுக்கு இணைந்துசெயல்படமுடியுமோ அந்தளவுக்கு இணைந்து செயற்படுகின்றோம். அத்தோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எம்முடன் நல்ல உறவாக உள்ளார்கள். அவர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனேயே இணைந்து செயற்படுகின்றோம் என கூறுகின்றார்கள்

நாங்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையாக செயற்படுகின்றோம். எனினும், கூட்டாகச் செயற்படும் போது பல பிரச்சினைகள், முரண்பாடுகள் ஏற்படும். ஆனால், தமிழ் மக்களுக்காக பயணிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரிந்தோ அல்லது தனித்தோ செயற்படவில்லை என்றார்.

# 21 க்குப் பின் கட்டுப்பாடுகளை ஆராய்வும்

விவசாயம் ஆடை மற்றும் ஏற்றுமதிதுறை, பொருளாதார மத்திய நிலையங்கள் தொடர்ச்சியாக இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போயா தினத்தை தவிர, ஏனைய நாள்களில் பொருளாதார மத்திய நிலையங்கள் திறந்திருக்கும். இந்த நடைமுறை இன்று (11) முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில், நேற்று (10) முற்பகல் இடம்பெற்ற, வீடியோ தொழில்நுட்பம் ஊடான கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது. இரண்டாம் அலகுத் தடுப்பூசிக்காகத் தேவைப்படும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஸ்பூட்னிக் தடுப்பூசிகள் அடுத்த வாரத்துக்குள் கிடைக்கவுள்ளதாக, கொவிட் ஒழிப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் பெருமளவானோர், 60 வயதுக்கு மேற்பட்டோர் என்றும் இவர்களின் அதிகமானோர், முதல் அலகுத் தடுப்பூசியைக்கூட ஏற்றாதவர்கள் என்றும், சுகாதார அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

அதனால், நடமாடும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வருகை தராத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு, உடனடியாகத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

> உற்பத்திகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியாமல், மரக்கறி வியாபாரிகள் பெரும் அசௌகரியத்துக்கு ஆளாகி உள்ளனர். அதனால், நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்து வைப்பது....

தடுப்பூசி ஏற்றுவதிலிருந்து பின்வாங்கும் நபர்களை, தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் ஊக்குவிக்குமாறும், ஜனாதிபதி தெரிவித்தார்.

தங்களுடைய உற்பத்திகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியாமல், மரக்கறி வியாபாரிகள் பெரும் அசௌகரியத்துக்கு ஆளாகி உள்ளனர். அதனால், நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்து வைப்பது தொடர்பிலும், இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

2020, 2021ஆம் ஆண்டுகளில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையால், சுமார் 7 இலட்சம் மாணவர்களுக்கான முதல்நிலைக் கல்வியும் அவ்வாறான மாணவர்களுக்கு குழந்தைப் பருவக் கல்வியும் இழக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது.

100 மாணவர்களிலும் குறைவானோர் காணப்படும் 3,000க்கும் அதிகமான பாடசாலைகள், கிராமங்களில் வியாபித்திருக்கின்றன. ஆதனால், அவ்வாறான பாடசாலைகளைத் திறப்பது தொடர்பில் காணப்படும் இயலுமை தொடர்பில் உடனடிப் பரிந்துரைகளை முன்வைக்கும் பொறுப்பு, சுகாதார மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் உள்ளடங்களான தொழில்நுட்பக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்களுக்கு மட்டும் பைசரை ஒதுக்கவும்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமது நாட்டில் தற்போது சிறுவர்கள் தொற்றுக்குள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதுடன், கொரோனாவால் சிறுவர்களின் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், பைசர் தடுப்பூசிதான் உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு ஏற்றப்பட வேண்டிய ஒரே சிறந்த தடுப்பூசி என பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதன் அவசியத்தை ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகிறோம் என்றார்.

ஆனால் தற்போது எமது நாட்டில் சிறுவர்களுக்கு பதிலாக இந்த தடுப்பூசி பல பிரதேசங்களிலும் பல்வேறு வயது மட்டங்களின் கீழ், அரசியல்வாதிகளின் தேவைகளுக்கு அமைய செலுத்தப்படுகின்றது.

விசேட வைத்தியர் குழுவின் கோரிக்கைக்கு அப்பால் இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்படுவதுடன், இதனால் ஏற்படும் முரண்பாடுகளால் விசேட வைத்திய குழுவிலிருந்து வைத்தியர்களும் விலகுகின்றனர்.

எனவே, இந்த முரண்பாடு எதிர்காலத்தில் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என்பதுடன், சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாவதும், இறப்பும் அதிகரிப்பதால் பைசர் தடுப்பூசியை சிறுவர்களுக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

> சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாகும் நிலை அதிகரித்து உள்ளதுடன், சிறுவர்களின் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது

எதிர்வரும் வாரங்களில் இலங்கைக்கு கிடைக்கவுள்ள 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை சிறுவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் கோரிக்கை விடுத்தாலும் மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்ற அழுத்தம் கொடுக்க எந்தவோர் ஆசிரிய தொழிற்சங்கமும் முன்வரவில்லை என்றார்.

ஆசிரியர்களது கோரிக்கை போலவே சிறுவர்களுக்காகவும் குரல்கொடுத்து, தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, கிடைக்கவுள்ள பைசர் தடுப்பூயை சிறுவர்களுக்கு ஒதுக்கவும் எனத் தெரிவித்த அவர், ஏனைய வயது பிரிவினருக்கு ஏனைய தடுப்பூசிகள் உள்ளதால் இவற்றை சிறுவர்களுக்காக ஒதுக்கவும் என அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார்.

இல்லையேல் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பில் அண்மையில் சந்திக்கும் துரதிஸ்ட சம்பவங்கள் போல், சிறுவர்கள் தொடர்பிலும் சந்திக்க நேரிடும் என்றார்.

# ஜனாஸா தோண்டி எடுக்கப்பட்டது

புத்தளம் வேப்பமடுவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முஹம்மட் நிஸ்தார் (வயது 56) என்பவரின் ஜனாஸாவே இவ்வாறு தோண்டியெடுக்க ப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை 4 ஆம் திகதி தனது வீட்டில் காலமான குறித்த நபர், அன்றைய தினமே வேப்பமடு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

எனினும், குறித்த நபர் உயிரிழந்து இரண்டு நாட்களின் பின்னர் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை அவரது மனைவி சித்தி அஜீபா (வயது 51) மற்றும் அவரது மகள் பாத்திமா சஹானா (வயது 37) திங்கட்கிழமை நண்பகல் வேளையிலும் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

ஒரேநாளில் உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவரினதும் ஜனாஸாக்கள் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது அவ்விருவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இரவரது ஜனாஸாக்கள் நல்லடக்கத்திற்காக புத்தளத்திலிருந்து ஓட்டமாவடிக்கு கடந்த புதன்கிழமை (08) அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், 4 ஆம் திகதி உயிரிழந்த முஹம்மட் நிஸ்தார் (வயது 56) என்பவருக்கும் கொரோனா தொற்று இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக சுகாதார பிரிவினர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். அதனையடுத்தே ஜனாஸா தோண்டியெடுக்கப்பட்டது.

# நுவரெலியாவில் சனக்கூட்டம்

9 மணி முதல் ஒரு மணி வரையும் ஒரு சில வங்கிகள் பிற்பகல் 3 மணி வரைக்கும் திறந்து வைக்கப் பட்டிருந்தன.

நுவரெலியா பிரதான தாபாலகமும் நேற்று காலை 9 மணி முதல் ஒரு மணி வரை திறந்து வைக்கப்பட்டிருந்தது. முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அத்துடன் பதிவு தபால்களும் மின்சார கட்டணமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சில சில்லறை கடைகளும் சதொசவும் திறந்திருந்தன. இதனால் நகருக்கு வருகை தந்திருந்த மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவுச் செய்துகொண்டு சென்றமையையும் அவதானிக்க முடிந்தது.

# தான்தோன்றீஸ்வரர் மஹோற்சவம் இல்லை

கொவிட்ட நிலைமை காரணமாக இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பரிபாலசபையினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு ஊடக அமையத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மஹோற்சவம் 15 பணியாளர்களுடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்தது. இந்நிலையில் கொரோனா தொற்று அதிகரித்துள்ளமையால். மஹோற்சவத்தை நாடாத்து இல்லையென முடிவு எட்டப்பட்டுள்ளது என ஆலய தலைவரும் வண்ணக்கருமாகிய பூபாலபிள்ளை சுரேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

# பெண்ணின் சடலத்தை பார்த்ததால் சிக்கல்

நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்டிருந்தது. அங்கு வைத்து சடலத்தை உறவினர்கள் திறந்து பார்த்துள்ளனர்.

இதுதொடர்பில், மல்லாவி பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கும் தாக்கல் செய்தனர்.

அதனை விசாரித்த நீதவான், சடலத்தை பொறுப்பேற்று தகனம் செய்யுமாறு மல்லாவி பிராந்திய சுகாதார பிரிவினர் உத்தரவிட்டதுடன், சடலம் திறக்கப்பட்டமை தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளமாறும் கட்டளையிட்டார்.

# திக்குத்தெரியாமல் போன யுவதி வீட்டுக்குத் திரும்பினார்

இராணுவத்தினரும், பிரதேசவாசிகளும் இணைந்து கடந்த நான்கு நாள்களாக தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த யுவதி நுவரெலியா சாந்திபுர பகுதியில் வைத்து கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளார்.

கிக்கிலியாமலை காட்டில் இருந்து, வழிதடுமாறி சாந்திபுர காட்டுக்கு சென்றுள்ள யுவதி, காட்டுக்கு வெளியே வந்து சத்தமிட்டுள்ளார். இதனை அவதானித்த பிரதேசவாசி ஒருவர், நுவரெலியா பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து, விரைந்த பொலிஸார், யுவதியை மீட்டு அவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்து வைத்திய பரிசோதனை செய்த பின்,பெற்றோரிடம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பிரதமர் மஹிந்த இத்தாலிக்கு விஜயம்

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட தூதுக் குழுவினரும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் பிரதமருடன் இவ்விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

எமிரேட்ஸ் விமானச் சேவைக்குச் சொந்தமான ரி.கே. 649 எனும் விமானத்திலேயே ஐக்கிய அமீரகத்தின் டுபாய் நோக்கி அந்தத் தூதுக்குழு நேற்று அதிகாலை 3.15க்கு பயணித்துள்ளது. அங்கிருந்து மற்றுமொரு விமானத்தின் ஊடாக, இத்தாலியை நோக்கி பயணிக்கும்.

# சமுர்த்தி உத்தியோகஸ்தர் கொரோனாவுக்கு மரணம்

என புத்தளம், கற்பிட்டி பகுதிகளுக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.


## அறிவித்தல்

### பீபள்ஸ் மேற்சன்ட் பினன்ஸ் பிஎல்சி- PQ 200 வருடாந்த பொதுக்கூட்டம்

கீழ்காணும் இந்தஅறிவித்தலின் பிரகாரம் பீபள்ஸ் மேர்சன்ட் பினன்ஸ் பிஎல்சி இன் 37வது வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) தொடர்பாக 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதியன்று முறைப்படி கொடுக்கப்பட்டஅறிவித்தலின்படி வியாழக்கிழமை, 2021 செப்டம்பர் மாதம் 30ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு இணையம் ஊடாக நிகர்நிலை தளத்தின் (Virtual Platform) நடைபெற உள்ளது.

கூட்டம் தொடர்பான நிகழ்ச்சிநிரல் மற்றும் கூட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் படிவத்தையும் கொழும்புபங்குச் சந்தையின் இணையத்தளம் https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=PMB.N0000 மற்றும் கம்பெனியின் இணையத்தளத்திலும் http://peoplesmerchant.lk/wp-content/uploads/2020/Annual_report/PMF-Annual-Report-2020-2021.pdf பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டத்தில் பங்குபெறவிரும்பும் பங்குரிமையாளர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட இணையத்தளங்களின் ஊடாக கிடைக்கப்பெறும் பதிவு படிவத்தை பூர்த்திசெய்து கூட்டம் ஆரம்பிக்கும் குறிப்பிட்ட நேரத்தில் இருந்து 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் pmfagm@pmb.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சபையின் தீர்மானத்தின்படி
**பீபள்ஸ் மேற்சன்ட் பினன்ஸ்** பினன்ஸ் பிஎல்சி
நிறுவனசெயலாளர்
கோர்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்
2021 ஆம் ஆண்டுசெப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி


# ஐ.நாவின் பொது சபைக்கு பாரியாருடன் ஜனாதிபதி பயணம்

பல நாடுகளின் அரச தலைவர்களுடன், இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார் அதன் போது, பொருளாதாரம், கல்வி, விவசாயம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் கலந்துரையாடுவர்.

ஜனாதிபதியுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே ஆகியோரும் செல்வர்.

ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் பாரியார் அயோமா ராஜபக்ஷவும் செல்லவுள்ளார். அவர், தனது சொந்தச் செலவில் இந்த விஜயத்தில் கலந்துகொள்கிறார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# மத்திய வங்கியின் ஆளுநர் ஓய்வு

கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவரது நியமனமானது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் செய்யப்பட்டது. இதற்கிணங்க, பேராசிரியர் லக்ஷ்மன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தலைவராகவும் தொழிற்பட்டார்.

பேராசிரியர் லக்ஷ்மன் நன்கறியப்பட்ட பொருளியலாளர் ஆவார். இவர் 1994 இலிருந்து 1999 வரையான காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார். 2005இல் கல்வியல் துறையில் அவர் ஆற்றிய பணிக்காக தேசமான்ய விருது அவருக்குவழங்கப்பட்டது.

பேராசிரியர் லக்ஷ்மன் இலங்கை மத்திய வங்கியின் 15 ஆவது ஆளுநராவார்.

# கொரோனாவும் குழந்தைகளும்

## தொற்றுக்குள்ளான குழந்தைகள், சிறிதளவான நோய் அறிகுறிகளையே வெளிப்படுத்துகின்றன



பைஷல் இஸ்மாயில்

சுகாதாரத்துறையை பொறுத்தவரையில், தெற்காசியா நாடுகளில் இலங்கை முதற்தர நாடாக திகழ்கின்றது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும், முக்கியமாக சிறுவர்களின் போசாக்கு நிலைமையை நாம் பேணுவதை சிறந்ததாகக் குறிப்பிடலாம். இலங்கையை பொறுத்தவரையில் தற்போது ஆறு மாதம் வரைக்கும் தாய்ப்பால் ஊட்டுகின்ற தாய்மார்களின் எண்ணிக்கை அதாவது, ஆறு மாதம் வரைக்கும் முற்று முழுதாக தாய்ப்பாலில் தங்கியிருக்கும் தாய்ப்பாலைப் பெறும் குழந்தைகள் அதிகம். அது அவர்களுடைய பிற்கால முளை வளர்ச்சி அவர்களின் தேக ஆரோக்கியத்துக்கும், உளவளத்துக்கும் உறுதுணையாக இருக்கும்.

ஆறு மாதம் முடிந்த பின்னர் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் சேர்த்து ஏனைய திண்ம ஆகாரங்களை கொடுப்பது சாலச்சிறந்தது. அதேபோல், பசுப்பாலை ஒரு வயது முடிந்த பின்னர் அறிமுகப்படுத்தலாம். ஏனென்றால், பசுப்பாலில் அதிகமான புரதங்களும், கனியுப்புக்களும் செறிந்து காணப்படுகின்றது. எனவே, சிறுவர்களின் சிறுநீரகத்துக்கு மேலதிகமாகச் செல்கின்ற கனியுப்புக்கள் அல்லது புரதத்தின் மூலம் வருகின்ற பதார்த்தங்களினால் வேலைப்பளு அதிகரித்து அவர்களுடைய சிறுநீரகங்கள் பாதிப்படைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்று கூறுகின்றார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குழந்தை நல வைத்திய நிபுணரும் கிழக்குப் பல்கலைக்கழக விகுழந்தை நல வைத்தியப் பிரிவு விரிவுரையாளருமான டொக்டர் விஷ்ணு சிவபாதம் MBBS, DCH, MD. தற்போதைய கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியில் குழந்தைகள் நலன் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

அதேவேளை பசுப்பாலில் இரும்புச்சத்தின் அளவும் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே, பசுப்பாலை உட்கொள்கின்ற குழந்தை இரும்புச்சத்து குறைபாட்டினால் ஏற்படுகின்ற இரத்தச் சோகை நோய்க்கு உள்ளாகின்ற வாய்ப்புகள் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், பசுப்பாலை ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கொடுக்கும்போது அவர்களின் குடலில் இருந்து குருதி இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றதால் இதுவும் குருதிச் சோகையை அதிகரிக்கும்.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு காய்ச்சிய பசுப்பாலைக் கொடுப்பது அதாவது அதில் நீர் கலந்தோ அல்லது கலக்காமலோ கொடுப்பது சுகாதாரத்துறையினரால் பரிந்துரைக்கப்படாத ஒரு விடயமாகும். எனவே, தாய்மார்கள் தங்களின் குழந்தைகளுக்கு ஒரு வயது முடியும்வரை பசுப்பாலை கொடுக்காமல் இருப்பதே சிறந்ததாகும். இருந்தபோதும், தயிர் அல்லது யோக்கட் போன்றவற்றை ஆறு மாதம் முடிவின் பின்னர் குழந்தைகளுக்கு கொடுக்கலாம்.

கேள்வி: இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம் என்ன?

கொவிட் 19 வைரஸ் தற்போது திரிவடைந்து மிக அதிகமாக பரவிக்கொண்டும் வருகின்றது. இந்தத் தொற்று பரவுவதற்குக் காரணம் பொதுமக்களே ஆகும். ஏனென்றால், கொரோனா வைரஸ் தொடர்பாக இலங்கை அரசும், சுகாதாரப் பிரிவினரும் அவ்வப்போது பொதுமக்களுக்கு அறிவுருத்துகின்ற சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றாமல் நடந்து கொள்வதாலேயே இந்த கொரோனா வைரஸ் பரம்பலுக்கும், திரிவுக்கும் காரணம் என்று சொல்லலாம்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நோக்கில் எமது அரசாங்கம் பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்காக பொதுமுடக்கத்தை அறிவித்து சுகாதார நடைமுறைகளையும் அறிவுறுத்தி வருகின்றது. இதனை பொதுமக்கள் பின்பற்றி மதித்து நடந்துகொள்ள வேண்டும். சுகாதாரத்துறையினரால் அறிவுருத்தப்படுகின்ற விடயங்களை முறையாக கடைப்பிடிப்பதன் ஊடாக, கொரோனாத் தொற்றை முழுமையாக கட்டுப்படுத்த முடியும். தவறும் பட்சத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

கேள்வி: குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்றைப்பற்றி என்ன குறிப்பிட விரும்புகின்றீர்கள்?

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை பார்ப்போமானால் 18 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஏற்பட்ட தொற்று உலகளாவிய ரீதியில் 8.4 சத வீதமாக காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் உண்டு. அதாவது, பெரியவர்களின் நிர்ப்பீடனத் தொகுதி குழந்தைகளின் நிர்ப்பீடனத் தொகுதியைவிட சற்று வித்தியாசமாகக் காணப்படுவதாலும், குழந்தைகள் வீட்டில் இருப்பதாலும், வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்று வரும்போது சுகாதார நடைமுறைகளைப் பேணி வருதாலும் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. பெரியவர்களுடன் குழந்தைகளை ஒப்பிடும்போது குறைந்தளவிலான தொற்றுத்தான் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தை பெரும்பாலும் சிறிதளவான நோய் அறிகுறிகளை மட்டுமே கொண்டுள்ளது.

கொரோனா வைரஸ் சுவாசப் பாதையை, சுவாசத் தொகுதியை பாதிக்கும் ஒரு தொற்றாகும். குழந்தைகளுக்கும் பெரியவர்கள் போலவே சுவாசம் சம்பந்தமான நோய் அறிகுறிகள் காணப்படும். அதாவது, தொண்டை நோவு, சுவாசிப்பதில் சிரமம், இருமல், தடுமல், மூக்கடைப்பு போன்றவற்றை குறிப்பிடலாம். அத்துடன் காய்ச்சல் ஏற்பட்டு அதிகமான உடல் வலியும் காணப்படலாம்.

மேலும், சில குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் கூட கொரோனாவின் அறிகுறிகளாகக் காணப்படலாம். ஆனாலும் நான் மேற்குறிப்பிட்டது போன்று தொற்றை வெளிக்காட்டாத குழந்தைகள்தான் மிக அதிகமாகக் காணப்படுகின்றனர்.

கொரோனா வைரஸிக்கு எதிரான மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் குழந்தைகளுக்கும் பெரியவர்களைப் போலவே அவர்களின் நோய் அறிகுறிகளுக்கு ஏற்றாப்போல் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக, தடுமல் அல்லது இருமல் இருக்கின்ற குழந்தைகளுக்கு தடுமல் அல்லது இருமலுக்குரிய மருந்துகளை வழங்குவோம். சுவாசத்தில் ஏற்படுகின்ற களைப்பு அல்லது சுவாசிக்க மறுக்கின்ற நிலைமை காணப்படும்போது அதற்கேற்றாப்போல் வைத்திய சிகிச்சை வழங்கப்படும்.



டொக்டர் விஷ்ணு சிவபாதம்

கேள்வி: ரோனா தொற்றுக்குள்ளான குழந்தைகளை வீட்டில் வைத்து பராமரிக்கும்போது கடைப்பிடிக்கவேண்டியவை யாது?

இலேசான அல்லது நோய் அறிகுறிகள் காட்டாத குழந்தைகளை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு சுகாதார அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வீட்டில் வைத்து பராமரிக்கப்படும் அக்குழந்தையை பெற்றோர்கள் கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும். அதாவது, அவர்களை வீட்டில் தனிமைப்படுத்தி வைக்கின்றபோது இயலுமானவரை ஒருவர் மாத்திரமே அவரைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

அவருக்கு தனியான குளியலறை, தனியான துவாய் போன்ற பாவனைப் பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் இந்தத் தொற்று குடும்பத்திலுள்ள ஏனையவர்களுக்கும் பரவாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். வீட்டில் வைத்து பராமரிக்கும்போது, அக்குழந்தைக்கு போதுமான அளவு நீர் ஆகாரங்கள், சுகாதாரமான உணவுகள் (புரதம் கூடிய உணவுகள்) சேர்த்துக்கொள்வதன் மூலம் அவர்களுடைய உடல் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ளலாம்.

குறிப்பாக, குழந்தை ஆபாத்தான அறிகுறிகளை வெளிப்படுத்தும்போது, அதாவது கடுமையான காய்ச்சல், சோர்வாகக் காணப்படும் தன்மை, நீர் ஆகாரங்களை அருந்தாத வேளை அல்லது சிறுநீரின் அளவு குறையும்போது, அல்லது வயிற்று வலி அதிகமாக இருக்கும்போது குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டும்.

இன்று பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற அதீத பயம் காரணமாக தங்களின் குழந்தையை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற ஒரு முனைப்பில் இருக்கின்றார்கள். இதனால் வைத்தியர்களினால் பரிந்துரைக்கப்படாத மாத்திரைகளையும், அதேபோல் இயற்கை முறையில் கிடைக்கின்ற கொத்தமல்லி போன்றவற்றை கொடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இது ஒரு சிறந்தமுறை அல்ல. கொரோனா வைரஸ் வந்த பின்னர் அதைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் ஏதும் இல்லை. இது வைரஸ் காய்ச்சல் என்பதால் சுயமாகவே அவர்கள் இதிலிருந்து குணமடைவார்கள். வைத்தியர்களினால் பரிந்துரைக்கப்படாத மாத்திரைகளை தாங்கள் பயன்படுத்தும்போது அதனால் ஏற்படுகின்ற பக்கவிளைவுகளும் அதிகமாகக் காணப்படும். எனவே, விற்றமின் “சி” விற்றமின் “டி” போன்ற மருந்துகளை வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் பெற்றுக்கொள்வது சிறந்ததல்ல. விற்றமின் “சி” போன்ற மாத்திரைகளை தொடர்ந்து பாவிப்பதனால் குழந்தையை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கலாம் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத ஒரு விடயமாகும்.



# சொந்த நாட்டின் ஏதிலிகள்

## இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியோரின் இன்றைய நிலை

க. அகரன்

**தமிழர் வாழ்வில் புலம்பெயர்தல் என்பது தவிர்க்கமுடியாத வரலாறாகிப்போயுள்ள நிலையில் இந்தியாவுக்கும் பலரும் இடம்பெயர்ந்திருந்தனர்.**

சுமார் 30 வருடங்களாக இந்தியாவில் மூன்றாவது சந்ததியுடன் வாழும் இலங்கைத் தமிழர் தொடர்பில் தற்போது பேசுபொருள் உருவாகியுள்ளது.

பல தசாப்தங்களாக அகதி என்ற நாமத்துடன் வாழ்ந்த இலங்கைத்தமிழர்கள் தற்போது இந்திய பிரஜாவுரிமை பெறும் நிலை உருவாகியுள்ளமையும் அவர்களது அகதிகள் என்ற பதம் மாற்றப்பட்டமையும் அவர்களுக்கான வசதிகளுமே இந்தப் பேசு பொருளுக்கு காரணமாகியுள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் வாழ்ந்த பலரும் யுத்த நிறைவுக்கு பின்னர் தமது தாயகத்தில் வாழும் அபிலாசைகளுடன் அரசின் வாக்குறுதிகளை நம்பி இலங்கைக்கு வந்திருந்தனர்.

இவர்களில் பெரும் பகுதியினர் வவுனியாவில் தமது வாழ்விடங்களில் குடியேறியுள்ள நிலையில், அவர்களின் வாழ்வியல் எவ்வாறு அமைந்துள்ளது என்பது தொடர்பில் ஆராயப்படவேண்டிய நிலை உள்ளது.

> **வவுனியா மாவட்டத்தில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியுள்ள நிலையில், இம் மக்களில் ஒரு சிலருக்கு மாத்திரமே இதுவரை காலத்திற்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது**

வவுனியா மாவட்டத்தில் 600 குடும்பங்களுக்கும் அதிகமானவர்கள் இந்தியாவில் இருந்து கடந்த 10 வருடத்தில் நாடு திரும்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் கூட, அவர்களில் எத்தனை சதவீதமானவர்கள் சுய பொருளாதாரத்துடனும் தமது தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் வாழ்கின்றார்கள் என்பது மீள் பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், மணிபுரம், கற்குளம், சுந்தரபுரம், வவுனியா வடக்கு என பல பகுதிகளிலும் இவ்வாறு நாடு திரும்பியவர்கள் வாழ்ந்து வரும் நிலையில், அவர்கள் வாழ்வியல் முறைகளும் அவர்களுக்கான பொருளாதார முயற்சிக்கான உந்துதல்களும் எவ்வகையில் வழங்கப்பட்டுள்ளது என்பது கேள்வியாகவே உள்ளது.

ஐந்து வடங்களுக்கு முன்னர், இந்தியாவில் இருந்து ஒரு தொகுதி மக்கள் நாடு திரும்பியிருந்தனர். அவ்வாறு வந்தவர்களை, கட்டுநாயக்க வானூர்திதளத்தில் மாலை போட்டு அழைத்து வந்த அரசு, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்ட சிறுதொகை நிதியையும் தகரங்களையும் தவிர எதையும் வழங்கவில்லை என தாயகம் திரும்பிய சிலர் பகிரங்கமாகவே குற்றம்சாட்டுகின்றனர்.



வாக்குறுதிகள் பயனற்றதாகப் போய்விடும் எனத் தெரிந்திருந்தால், அன்றே இந்தியாவில் அகதி முகாம்களில் வாழ்ந்திருப்போம் என்ற வார்த்தைகளை இன்று அவர்களிடம் காண முடிகின்றது.

எனினும் ஒரு சிலர்,தாம் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய பின்னர், சிறப்பாக வாழ்கின்றோம் என்ற வார்த்தைகளை சொல்லவும் தயங்கவில்லை.

வவுனியா மாவட்டத்தில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியுள்ளதாக வவுனியா மாவட்ட செயலக பதிவுகளில் தெரிவிக்கும் நிலையில், இம் மக்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கு மாத்திரமே இதுவரை காலத்திற்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய பலரும் இன்றும் நிரந்தர வீடின்றியும் விட்டுத்திட்டம் கிடைக்கும் என்ற அவாவில் தம்மிடம் இருந்த நகைகளை விற்றும் அயலவர்களிடம் கடன் பெற்றும் வீட்டத்திட்டத்திற்காக அத்திவாரம் போட்ட நிலையிலும் காலத்தை கழித்து வரும் துர்ப்பாக்கிய நிலையே வாழ்கின்றனர்.

தாயகம் திரும்புகின்றவர்கள் சிறந்த வசதிகளுடன் வாழ்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்த கருத்துகள் காற்றோடு கரைத்துள்ளமை கவலையளிப்பதாக தாயகம் திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம், தேசிய வீடமைப்பு திட்டத்தினூடான வீட்டுத்திட்டம் என்பன வழங்கப்பட்ட போதிலும் கூட ஆட்சி மாற்றங்களின் பின்னரான காலத்தில் குறித்த வீட்டுத்திட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே இந்தியாவில் இருந்த நாடு திரும்பியவர்களுக்கான வீட்டுத்திட்டமும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை பெரும் துர்ப்பாக்கியமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள் இது மாத்திரமின்றி யானை தொல்லைக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். எனவே இம் மக்கள் மாத்திரமின்றி யானை அச்சம் நிறைந்த பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு யானைகளால் ஏற்படக்கூடிய உயிராபத்து தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பு அரசிற்கு உள்ளது.

> **மின்சாரம் இல்லை, நிரந்த வீடு இல்லை, தொழில் இல்லை, சீரான கல்வி இல்லை என்ற நிலையில் உள்ள இம் மக்களுக்கு வாழ்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் பல குடும்பங்களுக்கு இன்றும் உள்ளன**

மின்சாரம் இல்லை, நிரந்த வீடு இல்லை, தொழில் இல்லை, சீரான கல்வி இல்லை என்ற நிலையில் உள்ள இம் மக்களுக்கு வாழ்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் பல குடும்பங்களுக்கு இன்றும் உள்ளது.

இந்தியாவில் கல்வியை தொடர்ந்த பலரும் இன்று இலங்கையில் கல்வியை தொடர்வதற்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் கற்ற பாடங்களுக்கும் இலங்கையில் கற்கும் படங்களுக்கும் உள்ள வித்தியாசம் காரணமாக பல மாணவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடைவதில் சிக்கல் நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக பாடசாலைகளில் அவர்கள் கற்றல் செயற்பாடு குறைந்தவர்கள் என்ற எண்ணப்பாட்டுக்கு உள்ளாகின்றனர்.

அரசின் வாக்குறுதிகள் ஏதுவான முறையில் நிறைவேற்றப்படாமை மற்றும் ஏற்கெனவே தாயகம் திரும்பியவர்களின் வாழ்வியல் முறைகள் இந்தியாவில் தற்போதும் வாழும் பலருக்கு அச்சத்தையும் மீண்டும் தமது தாயகம் நோக்கிய வருகைக்கும் தயக்கத்தை ஏற்படுத்தி வருவதனால் இந்தியாவிலேயே அகதி என்ற அந்தஸ்தோடு வாழத்தலைப்படும் செயற்பாட்டுக்கு தள்ளி விடுகின்றது.

இவ்வாறு இந்தியாவில் வாழும் இலங்கை மக்களை அந்த நாடே தத்தெடுத்தால்போல் இலங்கை மக்கள் மறுவாழ்வு நிலையம் என அவர்களும் வாழும் பகுதிக்கு பெயர் சூட்டி வீட்டுத்திட்டம் மற்றும் சலுகைகளை அளித்துள்ளமை பெரும் ஆறுதலாக உள்ளபோதிலும் அவர்களுக்கு தங்கள் மண் மீது வாழ்ந்துவிட வேண்டும் என்ற ஏக்கமும் இருக்கவே செய்கின்றது.







# பொன்விளையும் பூமி

## வலுவாதார அபிவிருத்தியில் கண்டல் சதுப்பு நிலங்கள்




அபிராமி விமலாதித்தன்

(வலுவாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், இலங்கை வலுவாதார அபிவிருத்தி சபை)


வலுவாதார அபிவிருத்திக்கான உலகளாவிய 2030ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலானது, அபிவிருத்திச் செயன்முறையின் மத்தியில் மக்களை செயற்பட வைக்கின்றது. தற்போது உலகம் எதிர்நோக்கியுள்ள பல சவால்களை எதிர்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையானது (UN), உலக நாடுகளை வலுவாதார அபிவிருத்தியை நோக்கி முன்னேற்றுவதற்கு முனைகின்றது. வலுவாதார அபிவிருத்தி என்பது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளில் இடையூறை ஏற்படுத்தாத வகையில் தற்போதைய தேவைகளுக்கு இடமளிக்கும் அபிவிருத்தியாகும். பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றாடல் என்பவை வலுவாதார அபிவிருத்தியின் மூன்று தூண்களாக ஐக்கிய நாடுகள் சபையினால் இனங்காணப்பட்டுள்ளது.

அனைத்தையும் உள்ளடக்கிய செயன்முறை மூலம் தயாரிக்கப்பட்ட 2030 நிகழ்ச்சி நிரலானது 17 வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் 169 தொடர்புடைய அடைவுகளை உள்ளடக்கியுள்ளது.

எமது சமகால நிலைமைகளில் காலநிலை மாற்றம் என்பது நாம் எதிர்நோக்குகின்ற மிகப்பெரும் சவால்களில் ஒன்றாகும் இது இலக்கு 13இனால் உற்று நோக்கப்படுகின்றது. உலக வெப்பநிலை அதிகரிப்பு, கடல் மட்ட உயர்வு, கடல் அமிலமயமாதல் மற்றும் பிற காலநிலை மாற்ற தாக்கங்கள் கடலோரப் பகுதிகளையும் தாழ்வான கடலோர நாடுகளையும் கடுமையாகப் பாதிக்கின்றன. காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கையானது 2018ஆம் ஆண்டின் உலகளாவிய தரவரிசையில் 2வது மற்றும் 2019ஆம் ஆண்டில் 6வது இடத்தில் பட்டியலிடப்பட்டு காலநிலை அபாயக் குறியீட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் காலநிலையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட அனர்த்தங்கள் உட்பட நாட்டிற்கு முகங்கொடுக்க நேர்ந்த அதிகரித்துச் செல்லும் சுற்றாடல் சவால்களையும் கவனத்திற் கொள்ளும் போது, பாரிஸ் காலநிலை உடன்படிக்கை (Paris Climate Agreement) மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சன்டாய் சட்டகம் (Sendai Framework) உட்பட சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சர்வதேச உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் என்பன வாயிலாக வலுவாதார அபிவிருத்திக்கான பூகோள ஊக்குவிப்புக்களை இலங்கை வெற்றி கொள்ள முயல்கின்றது.

உலகில் 120ற்கும் அதிகமான நாடுகளில் சதுப்பு நில கண்டல் தாவர பரம்பல்கள் காணப்படுகின்றன. உலகில் 73 வகை கண்டல் தாவர இனங்கள் 152,000 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் காணப்படுகின்றது. இவ்வகைக் கண்டல் தாவரங்கள் வெப்பவலய, இடைவெப்ப வலய, நாடுகளிலேயே பெருமளவில் காணப்படுகின்றது. கண்டல் சதுப்பு நில காடுகள் (mangrove) இலங்கையின் பெருமளவிலான கடனீரேரிகள், மற்றும் நதிமுகத்துவாரங்கள் போன்ற பகுதிகளில் அதிகளவிலான கடலோர சூழற்றொகுதியை உருவாக்குகின்றன.

2011ல் இலங்கையில் கண்டல் தாவர வனங்கள் 16,037 ஹெக்டயர் காணப்படுகின்றது என இலங்கையின் வனப்பாதுகாப்பு திணைக்களம் தெரிவிக்கின்றது, இது மொத்த நிலப்பரப்பில் 0.24% ஆகும். இலங்கையில் 21 வகை கண்டல் தாவர இனங்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, தென்மேல் மற்றும் வடமேற்கு மாகாண கடற்கரை ஓரங்களில் பரந்து காணப்படுகின்றன. இவை உவர் நீரில் மட்டுமன்றி நன்னீரிலும் வளரக்கூடிய இவ்வகைத் தாவரங்கள் சதுப்பு நிலங்களிலேயே வளர்கின்றன.

மேலும் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு தொடர்பான 'ரம்சார் கொள்கையானது' (Ramsar Convention) இலங்கையில் 'ரம்சார்' சதுப்பு நிலங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களாக, புந்தள வனம், மடு ஆறு பிரதேசம், குமண வனம், ஆனவிழுந்தாவ (சிலாபம்) பகுதி மற்றும் வங்காலை (மன்னார்) ஆகியவற்றை பிரகடனப்படுத்தியுள்ளது.

இச்சதுப்பு நில தாவரங்களானது சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வகைத் தாவரங்களானது வளியிலுள்ள கார்பன்டை ஒக்சைட்டை உறுஞ்சுதல் மற்றும் பிரித்தெடுத்தல், வடிகட்டுவதன் ஊடாக கரையோர வளிமண்டலத்தை பாதுகாத்து அபாயகரமான காலநிலைமாற்ற அனர்த்தங்களின் தாக்கங்களைக் குறைக்கின்றதுடன் கரையோர மண்ணரிப்பினையும் தடுக்கின்றது. இச் சுற்றுச்சூழல் தொகுதி கடல் நீர் மற்றும் அலை நடவடிக்கைகளின் செல்வாக்கிற்கு அடிக்கடி உட்படுத்தப்படுகின்றமையால் பல்வகை உயிரினங்கள், தாவர இனங்கள் போன்ற உயிர்ப்பல் வகைமைகள் தங்கி வாழ்வதற்கு ஏற்ற இடமாக உருவாகின்றது. மேலும் சுற்றுலாத்துறைக்கு அதிகளவிலான பங்களிப்பை வழங்கிகரையோர மக்களுக்கு நிலையான வாழ்வாதாரங்களையும் இவை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

அதிகளவிலான கழிவுகளை கொட்டுவதன் மூலம் இவ்வகை நிலங்கள் மாசடைவதுடன்விறகுத் தேவைக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றன. திட்டமிடப்படாத நகரமயமாக்கல், சட்ட விரோத நில அத்துமீறல்கள், கட்டுமானத் திட்டங்கள், குடியிருப்புகள், குடியேற்றங்களுக்கான ஆக்கிரமிப்புக்கள், கழிவு நீர் கலப்பு, அந்நிய நுண்ணுயிர்கள் போன்ற நடவடிக்கைகள் மூலம் இக் கண்டல் சதுப்பு நிலங்கள் தமது சிறப்பு தன்மையை இழந்து அழிவை எதிர்நோக்கி வருகின்றன.

இலங்கையின் காலநிலை மாற்றத்தாக்கங்களைக் குறைவடைய செய்யவும் கடலோர சமூகங்களின் வலுவாதார வளர்ச்சிக்கு உதவவும் கண்டல் தாவரபரம்பலை பாதுகாப்பது மிகவும் அவசியம் ஆகின்றது. சதுப்புநில கண்டல் தாவர மீள் நடுகைகளை ஊக்குவித்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பவை புதிய தாவரப்பரம்பலை அதிகரிக்க உறுதி செய்கின்றது. சதுப்பு நில கண்டல் தாவரங்கள் தொடர்பான முக்கியத்துவம் தொடர்பாக கல்வியறிவூட்டல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் செயல்திறன்மிக்க திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கான, பெண்கள், இளைஞர்கள் சமூகங்களை மையமாகக் கொண்ட, காலநிலை நடவடிக்கைகளின் திறனை உயர்த்துவதற்கான வழிமுறைகளை ஊக்குவித்தல் போன்றவை இலக்கு 13 இனை அடைவதற்கு வழிகோலும்.

மேலும் 2030 க்குள் அதிக முன்னுரிமையாக தீவிர வறுமையை ஒழித்தல் மற்றும் அனைத்து வகையான வறுமையையும் குறைக்கும் இலக்குகளுடன் கூடிய மேம்பாட்டுத் திட்டங்கள் கரையோர மக்களது வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பதன் மூலம் இலக்கு ஒன்றினை அடைவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். காலநிலை தொடர்பான தீவிர நிகழ்வுகள் உட்பட பேரழிவுகளால் பாதிக்கப்படக் கூடிய கரையோர ஏழை சமூகங்களிடையே, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் உள்ளடங்கலாக உறுதியான அம்சங்களை கட்டமைக்க இது உதவும். இலங்கை மத்திய வங்கியின் 2019ம் வருட ஆண்டறிக்கைக்கு அமைய இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது, தனிநபர் வருமானமாக 2018இல் 4,079 அமெரிக்க டொலர் உயர்மட்ட நடுத்தர வருமான நிலையை அடைந்து, முழுமையான வறுமையை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு உதவியது. இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை 4% வரை குறைந்திருப்பதாக தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த வருடங்களில் வறுமைப்பட்டவர்களின் எண்ணிக்கை (poverty head count index) விகிதம் படிப்படியாக குறைந்து ஏராளமான மக்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே வாழ்வதை நிரூபணமாக்கியுள்ள போதிலும், நாட்டில் குறிப்பிடத்தக்க வறுமை காணப்படும் பகுதிகள் இன்னும் உள்ளன.

மேலும் 2020இல் புதிய நெருக்கடியாக உருவெடுத்த கொவிட் தொற்றுக்களால் சிறியளவில் வளர்ச்சியை எதிர்நோக்கிய சுற்றுலாத்துறையானது மீண்டும் பாரியதொரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கண்டல் தாவர சதுப்பு நிலங்களானது அதிகளவிலான வெளிநாட்டவர்களை கவர்கின்றமையினால் சிறப்பானதொரு சுற்றுலாத்துறை சார் கொள்கை திட்டமிடலுக்கு வழிகோலுகின்றது. பல்வேறு சட்ட திட்டங்கள், அரச நிறுவனங்களின் பங்களிப்பு போன்றவற்றால் கண்டல் தாவர நிலம் சார் பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கு நியாயமான, சமமான, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான ஓர் அணுகுமுறையை மேற்கொள்வதை உறுதி செய்வதன் மூலம், எமது மக்கள் மற்றும் எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக வலுவாதார அபிவிருத்தியை நோக்கிய அதிக நன்மைகளைப் பெற முடியும். நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியானது, அனைவருக்குமான சுகாதார வசதிகள், கல்வி அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான அபிவிருத்தி கொள்கைகள், நிலைபேறான விவசாய திட்டங்களை முன்னிறுத்துவதன் மூலமாக பசியை ஒழித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல், பால்நிலை சமத்துவத்தை அடைதல்; நிலைபேறான நவீன சக்தியினை உறுதி செய்தல்; கௌரவமான அனைவரையும் உள்ளடக்கிய வேலைவாய்ப்பு வசதிகளையும் நிலைபேறான நகரங்களையும் அமைத்தல்; கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களையும் சூழலியலையும் பாதுகாத்தல் போன்ற SDGக்களின் குறிக்கோள்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலமாக இலங்கையை வலுவாதார அபிவிருத்தியுடனான ஒரு நாடாக உருவாக்கலாம்.



100 ஆவது ஆண்டில்

# மரியாயின் சேனை

### மரியாயின் சேனையாளர்கள்

மிகச்சிறந்த முறையில் கடவுளை அன்பு செய்வது எப்படியென்றும், இவ்வுலகில் அந்த அன்பைப் பரப்பி ஆன்மாக்களுக்குத் தொண்டுபுரியுமாறு உழைப்பது எப்படியென்றும் யோசித்தார்கள். அந்த ஆலோசனையின் பயனாக மரியாயின் சேனை உருவானது. (சேனை கைநூலிலிருந்து)

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் ஏழாம் திகதி அயர்லாந்து நாட்டின் டப்ளின் மாநகரில் மீரா இல்லத்தில் பதினைந்து பேருடன் மிக மிக எளிமையான முறையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 170 நாடுகளில் தன் கிளைகளைப்

> **மரியாயின் சேனை நூறாவது ஆண்டை கொண்டாடும் இவ்வேளை, சேனையின் உறுப்பினராக சேர உங்களுக்கும்; அழைப்பு விடுகின்றது**

பரப்பி பல இலட்சக்கணக்கான உறுப்பினர்களுடன் கத்தோலிக்க திருச்சபையில் பொதுநிலையினருக்கான ஓர் அப்போஸ்தலிக்க இயக்கமாக இயங்கி வரும் மரியாயின் சேனை அன்று போல் இன்றும் கூட அடிப்படை ஒழுங்கு முறைகளில் துளியளவும் மாற்றமின்றி உதாரணமாக வாராந்தம் கூட்டம் வராந்தம் பணி எனும் அடிப்படையில் நூறு ஆண்டுகளாக இடைவிடாது இயங்கி வருவது மரியாயின் இடைவிடா பரிந்துரையால் ஆண்டவர் இயேசு நிகழ்த்திய மாபெரும் அற்புதமே என்றால் அது மிகையாகாது.

பொதுவாக ஓர் அமைப்பை உருவாக்குதற்கு முன் ஒரு சிலர் அமர்ந்து பல நாள்கள் ஆராய்ந்து சட்டதிட்டங்களை உருவாக்கி பின்னர் அந்த அமைப்புக்கு ஒரு பெயர் சூட்டி ஆரம்பிப்பார்கள். ஆனால் மரியாயின் சேனையின் தோற்றமோ, இந்த இயற்கை நியதிக்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருந்தது.

ஒரு மாலை வேளையில் அவர்கள் ஒன்று கூடினர். மேசை மீது ஓர் எளிய பீடம் அமைக்கப்பட்டது. தூய வெண்ணிறத் துணியின் மீது அமல உற்பவ அன்னையின் திருச்சுரூபம் வைக்கப்பட்டு சுரூபத்தின் இருமருங்கிலும் பூச்சாடிகளில் பூங்கொத்துகளுடன் இரு தீபக்கால்களில் மெழுகுதிரிகள் எரிந்துகொண்டிருந்தன. சேனைப் பீடத்தைப் பற்றி முன்கூட்டியே முடிவெடுக்கப்படவில்லை. நேரத்தோடு வந்த பெண்களில் ஒருவர் செய்திருந்த எளிய தயாரிப்பு அது. மரியாயின் சேனை ஒரு படை. போர்வீரர்கள் ஒன்றுகூடும் முன்னே சேனையின் அரசி அங்கே அவர்களுக்காக காத்திருக்கின்றார் என்ற உண்மையை துலக்கிக் காட்டும் வகையில் அப்பீடம் அமைந்திருந்தது.

அன்று 13 பெண்களும் சேனை உருவாக இறைவன் கருவியாக பயன்படுத்திய இறைபணியாளர் பிராங்க் டஃப் அவர்களும் மற்றும் அருட்பணியாளர் மைக்கல் டோஹர் அவர்களும் ஒன்று சேர்ந்து முழந்தாள் படியிட்டு, 'தூய ஆவியே எழுந்தருளி வாரும்' எனும் செபத்தை செபித்து, வரலாற்று முக்கியத்துவம் மிக்க சேனையின் முதல் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அவர்கள் வெறுமனே ஒரு பக்திச் சபையை உருவாக்கவில்லை. மாறாக தன் அயலானில் கிறிஸ்துவையே கண்டு அவருக்கே பணிபுரியும் அப்போஸ்தலிக்க இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

உலகளாவிய ரீதியில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு பலநாடுகளில் தனது கிளைகளை பரப்பியதை அடுத்து 1936ம் ஆண்டு இலங்கையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாண்டியன் தாழ்வு என்ற சிற்றூரில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் அப்போதைய பங்குத்தந்தையாக இருந்த அமரர் அருட்திரு. ஜே.ஏ. இராஜநாயகம் அடிகளாரின் வழிகாட்டலில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த




> **பாண்டியன் தாழ்வு என்ற சிற்றூரில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் அப்போதைய பங்குத்தந்தையாக இருந்த அமரர் அருட்திரு. ஜே.ஏ. இராஜநாயகம் அடிகளாரால் இலங்கையின் முதலாவது மரியாயின் சேனை பிரசிடியம் ஆரம்பிக்கப்பட்டது**

இலங்கையின் முதலாவது மரியாயின் சேனை பிரசீடியம் ஆரம்பிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

உறுப்பினர்களை



> **பொதுவாக ஓர் அமைப்பை உருவாக்குதற்கு முன், பல நாள்கள் ஆராய்ந்து சட்டதிட்டங்களை உருவாக்கி பின்னர், அந்த அமைப்புக்கு ஒரு பெயர் சூட்டி ஆரம்பிப்பார்கள். ஆனால், மரியாயின் சேனையின் தோற்றமோ...**

புனிதப்படுத்துவதன் வாயிலாக கடவுளை மகிமைப்படுத்துவதே சேனையின் நோக்கமாகும். 'நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்' (1தெசலோனிக்கர் 4:3) உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவராயிருங்கள். (1 பேதுரு 1:15-16) என்று புனிதத்துவம் பற்றி இறைவார்த்தை ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கின்றது.

இறைவார்ததையின் அடிப்படையில் இவ்வுலகில் மிக முக்கியமானது புனிதம்தான். நாம் அடைய வேண்டிய இலக்கும் அதுதான். இறையடியார் பிராங்க் டஃப் கூறுவது போல 'நாம் புனிதர்களாக ஆசைப்படுகின்றோம். நம்மை விட பல்லாயிரம் மடங்கு ஆண்டவர் அதை விரும்புகிறார்' என்கிறார். எனவே ஒவ்வொருவரையும் புனிதராக அழைப்புவிடுக்கும் மரியாயின் சேனை இந்த நோக்கத்தை அடைவதற்குரிய இரண்டு வழிகளை காட்டித் தருகின்றது. அவை செபமும், சேவையுமாகும்.

மரியாயின் சேனை நூறாவது ஆண்டை கொண்டாடும் இவ்வேளை இருகரம் விரித்து சேனையின் உறுப்பினராக சேர உங்களுக்கும்; அழைப்பு விடுகின்றது.

நீங்கள் சிறுவரானாலும் இளைஞரானாலும் வயது வந்தவரானாலும் முதிர்வயதினரானாலும் உங்களுக்கும் சேனையின் விசேட அழைப்பு உண்டு. வாராந்தம் கூட்டத்தில் பங்குபற்றி பணி செய்யக்கூடியவர்கள் ஊழிய உறுப்பினராகவும், சேர ஆசைதான்; ஆனால் கூட்டத்துக்கும் பணிக்கு என்னால் வரமுடியாத சூழ்நிலை இருக்கின்றது என்று கூறுபவர்களுக்கு வீட்டிலிருந்தே செபிக்கும் உதவி உறுப்பினராக சேரும் வாய்ப்பு உண்டு.

எனவே வாருங்கள் மரியாயின் சேனையில் சேருங்கள். மரியன்னையின் படையில் பணிபுரியும் போர்வீரர் ஆகுங்கள்.

இலவசமாக தகனக்கிரியை

# ஒரு முன்மாதிரி


**மாத்தளை மாநகர சபையின் முதலாவது தமிழ் மேயர் சந்தனம் பிரகாஷ் அதிரடி**




விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா









கொரோனாவால் மக்களின் வாழ்வாதாரம் வருமானம் பாதிக்கப்பட்டிருப்பதால் வசதி இல்லாமல் உள்ளது. அதை உணர்ந்தே இதிலும் எமது நிவாரணத்தை வழங்கவேண்டும் என்ற மனிதாபிமான நோக்கொடு நாம் இலவச தகனக்கிரியை ஏற்பாட்டை செய்துவருகின்றோம் என மாத்தளை மாநகரசபையின் முதலாவது தமிழ்மேயர் சந்தனம் பிரகாஷ் கூறினார்.

இலங்கையில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் 24 மாநகர சபைகளும் 41 நகர சபைகளும் 276 பிரதேச சபைகளும் இயங்குகின்றன.இந்த 24 மாநகர சபைகளில் மூவினம் சார்ந்தவர்களும் மேயர்களாக தாவது மேயர்களாகவுள்ளனர். ஆனால், இவர்களில் மூன்றே மூன்று மேயர்கள் தமிழர்களாவர். கிழக்கில் மட்டு. மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன்; வடக்கில் யாழ்.மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்; மாத்தளை மாநகர சபை மேயர் சந்தனம் பிரகாஷ்; ஆக, வடக்கு கிழக்கிற்கு வெளியேயுள்ள ஒரேயொரு தமிழ் மேயர் சந்தனம் பிரகாஷ் மட்டுமே என்பது வெள்ளிடைமலை.

மாத்தளை மாநகர சபையில் 21 உறுப்பினர்களில் 3 தமிழ் உறுப்பினர்கள், 5 முஸ்லிம் உறுப்பினர்கள், 13 சிங்கள உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்தநிலையில் தமிழ் பிரமுகர் ஒருவர் மேயராக இருப்பதென்பது போற்றுதற்குரியது; பெருமைக்குரியது.

அண்மையில், முதன்முதலாக கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்செய்தபோது வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை முருகன் கோவிலுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு அவரிடம் பெற்ற நேர்காணலை, இங்கு வாசகர்களுக்காக தருகிறோம்.

கேள்வி: தாங்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்? தங்களது அரசியலுக்குள் ஈர்த்த அரசியல் ஆசான் யார்?

பதில்: நான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவன். எமது கட்சியின் அரசியல் தலைவர்கள் குறிப்பாக மத்திய மாகாண சபை உறுப்பினர் முத்துசாமி சிவஞானம், என்னை அரசியலுக்குள் வரவைத்தார்; எனது அரசியல் ஆசான் அவர்தான்.

நான், 2002ஆம் ஆண்டு மாத்தளை மாநகர சபையில் ஓர் உறுப்பினராக அரசியலில் பிரவேசித்தேன். 2018இல் உதவி மேயராகவும் 26 ஒகஸ்ட் 2020இல் பதில் மேயராகவும், 2021 ஜனவரி 6ஆம் திகதி முதல் நிரந்தர மேயராகவும் சேவையாற்றி வருகிறேன்.

2002 இலிருந்து 4முறை உறுப்பினராகத் தெரிவானேன். இறுதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஐ.ம.சு முன்னணி சார்பில் தெரிவானேன்.

2002 தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பிலும் பின்னர் 2006, 2011, 2018 களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் தெரிவானேன்.

கேள்வி: மாத்தளை மாநகரின் சமுகக் கட்டமைப்பு பற்றிக்கூறுங்கள்?

பதில்: மாத்தளையில் 50 சதவீதம் பெரும்பான்மையின சமூகத்தினரும் மீதி தமிழ், முஸ்லிம் சமுகத்தினர் சரிசமமாக ஒற்றுமையாக வாழ்ந்துவருகின்றனர்.

நான் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். மாத்தளை இந்து தேசியக் கல்லூரியில் உயர்தரம் வரை கல்விக் கற்றவன். கல்விகற்கும்போதே சமுகசேவையிலும் ஈடுபட்டவன். ரத்தோட்டை இந்துக்கல்லூரியில் சிறிது காலம் (1996-98 ) தொண்டராசிரியராக பணியாற்றியவன்.

அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்டதுறையில் தெரிவுசெயயப்பட்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் கையில் விருது பெற்றேன். உள்ளூராட்சி சபையில் உதவி நூலகராகவும் பணியாற்றினேன்.

உள்ளூராட்சி முறைமையில் டிப்ளோமாப் பட்டம் பெற்றுள்ளேன்.

கேள்வி: மாத்தளை மாகர சபை வரலாற்றில் முதலாவது தமிழ் மேயர் என்ற பெருமையை பெற்றுள்ளீர்கள். அதன் வரலாற்றை சொல்லுங்கள்?

பதில்: மாத்தளை மாநகர சபை வரலாற்றிலே எனக்கு முன்பு சிங்கள, முஸ்லிம் அன்பர்களே மேயராக இருந்துள்ளனர்.

மாத்தளை 1947இல் உள்ளூராட்சி மன்றமாக பரிணமித்தபோதிலும் 1970களில் மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டது. 1970க்கு முன்பு நகர சபையாகவிருந்தபோது இருபெரும் தமிழ்த்தலைவர்கள் தம்பிராசா ஐயா, எதிர்மன்னசிங்கம் ஐயா ஆகியோர் தவிசாளர்களாக இருந்துள்ளனர்.

கேள்வி: இலங்கையில் கொரோனாச் சேவைகளை சிறப்பாக, மாத்தளை மாநகர சபை முன்னெடுத்து வருவதாக அறியக்கிடைத்தது. அதுபற்றிக்கூறுங்கள்?

பதில்: எமது சபையால் கொரோனாவுக்கென பல வேலைத்திட்டங்களை செய்துவருகிறோம். கூடுதலான நிதியை கொரோனாச் சேவைக்கு ஒதுக்கி பயன்படுத்தி வருகிறோம். உறுப்பினர்களும் ஏகோபித்த முறையில் தமது பூரண ஆதரவை நல்கிவருவதும் இவ்வெற்றிக்கு காரணமாகும்.

மாத்தளை மாநகர எல்லைக்குள் கொவிட் 19 தொற்றுக்குள்ளான தொற்றாளர்களை அவசர நிலைமைகளின் போது சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து செல்வதற்கு வாகன வசதியின்மையால் அசௌகரியத்துக்கு உள்ளாகிவந்தனர்.

இதற்கு தீர்வுகாணுமுகமாக எமது சபையினால் இவ் இலவச வாகனசேவையை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கென ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்காக உதவி கரம் நீட்டுவதற்காக 24 மணித்தியால இலவச வாகன சேவையை வழங்குவதற்கு கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவசர தேவைக்கு (Hotline) 0710227227 க்கு தொடர்பு கொள்ளலாம்.

பொசிட்டிவ் என இனங்காணப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வது மட்டுமல்ல அவரோடிருந்த ஏனைய குடும்ப உறுப்பினர்களுகளை தனிமைப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான மருந்துகளை எமது சபையிலுள்ள மற்றொரு குழுவினர் வழங்குவார்கள்.

கேள்வி: ஏனைய இடங்களில் சுகாதாரத்திணைக்களம் முன்னெடுத்திருக்கின்ற தடுப்பூசி வழங்கும் திட்டத்தை நீங்கள் முன்னெடுத்திருப்பதாக அறிகிறோம். அது எவ்வாறு சாத்தியமாயிற்று?

பதில்: மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தையும் பலரும் மெச்சத்தக்க வகையில் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு எமது வைத்தியஅதிகாரி டொக்டர் அனுசா வெலகெதர உள்ளிட்ட சுகாதாரக்குழுவினர் பரிபூரணமாக ஒத்துழைத்து வருகின்றனர். மாநகர சபையில் 45 ஆயிரமளவில் வாக்காளர்கள். மக்கள் சனத்தொகை 90 ஆயிரம்பேரளவில் வாழ்ந்துவருகின்றனர்.

கேள்வி: கொரோனாவால் மரணித்தவர்களின் உடலங்களை தாங்களே பொறுப்பெடுத்து தகனக்கிரியைகளை இலவசமாக செய்வதாக கூறப்படுகின்றதே?

பதில்: சபையில் ஒரு பிரேரணையை கொண்டுவந்து கொரோனாவால் இறக்கின்றவர்களின் உடலங்களை நாமே பொறுப்பெடுத்து இலவசமாக தகனக்கிரியை செய்துவருகின்றோம். இதுவரை சுமார் 150 பேர் அளவில் உடலங்கள் தகனக்கிரியையை செய்துள்ளோம். ஒருவர் கொரோனாவால் மரணித்தால் அவருக்காக சுமார் 10 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை எமது சபைக்கு செலவாகின்றது. இருந்தும் மக்களுக்கான உயரிய அந்திமகால சேவையாக இதனைக்கருதுகிறோம்.

உண்மையில் இது எமது மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்களுக்கு மாத்திரமே என்று ஆரம்பிக்கப்பட்டது. எனினும் எமது எல்லைக்குள் உள்ள மாத்தளை ஆதார வைத்தியசாலையில் கொரோனாவால் மரணிக்கும் அனைவரது உடலங்களையும் அவர் எந்த ஊராக, எந்த இனத்தவராக இருந்தாலும் நாமே முன்னின்று பொறுப்பேற்று அதனை முறைப்படி தகனம்செய்து வருகின்றோம்.

கேள்வி: கிழக்கிற்கு முதல்தடவை வந்துள்ளீர்கள். அதுவும் காட்டுக்குள் உள்ள உகந்தமலை முருகளைத் தரிசிக்க வந்த காரணம் என்ன?

பதில்: இது எனது நீண்டநாள் ஆசை. இவ்வாலயத்தைப்பற்றி ஊடகங்கள் வாயிலாக உங்கள் எழுத்துகளில் பலதடவைகள் வாசித்திருக்கிறேன். வரலாற்று பிரசித்திபெற்ற உகந்தைமலை முருகனாயலத்திற்கு வரவேண்டும். அருளாசிபெறவேண்டும் என்ற ஆசை இருந்தது.



கொரோனாவால்

# கடனில் மூழ்கும் நமது சமூகம்



நடராஜன் ஹரன்



கொரோனா மரணங்கள் நம்மை அழைக்க மறுபுறம் தற்கொலை உயிர் இழப்புகளும், வட புலத்தில் வாள்வெட்டு உயிரிழப்புகளும், திடீர் விபத்து உயிரிழப்புகளும் சமுகத்தின் அக்கறையீனத்தால் ஒவ்வொருவரது சுய கட்டுப்பாடு இன்மையாலும் நிகழ்கின்றது.

உலகில் இன்று ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவல் இரண்டு வருட காலமாக நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் இந்தக் காலகட்டத்தில் உலகெங்கிலும் பொருளாதாரங்கள் மிகப் பெரும் சரிவையும் சவாலையும் எதிர்நோக்கி வருகின்றன.

இது இவ்வாறு இருக்க, நாட்டின் அனைத்து பகுதிகளும் தற்காலத்தில் தனிமைப்பட்டிருக்கின்றன. இந்த கொரோனாவின் தாக்கம் காரணமாக மூடப்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் படும் துயரங்களை யாரும் அறியாமல் இருக்கிறோம்.

ஆங்காங்கே தினம் தினம் உழைக்கின்ற தொழிலாளர்களின் குடும்பங்கள் படுகின்ற துயரங்களை யாரும் பார்த்ததாக இதுவரை தெரியவில்லை. அதேபோல இன்று மூடப்பட்டிருக்கும் பல பொதுச் சந்தையில் அதன் பிரதான வாசலில் இதனை நம்பி வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளின் குடும்பங்கள் படும் துயரங்களையும் தினம் தினம் உழைத்து வாழ்வோர், இதேபோல இந்தச் சந்தைக்கு அவர்களது உற்பத்தியை வழங்கி வருகின்ற விவசாய வியாபாரிகள் ,உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர் .

**ஏங்களுக்கிட்ட கடன் கேட்டால் நாங்கள் வங்கி சட்டத்துக்குட்பட்டு எல்லாம் சரியாக இருந்தால் கடன் குடுக்கிறம்; இருந்தும் குடுத்த கடனை இப்ப சில பேர் கட்டுறத்துக்கு ஏலாம இருக்கு; கடன் ஏடுத்தவங்க ஏப்படியும் கட்டித்தான் ஆகனும்**

இவர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலையில் தங்களது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, ஆங்காங்கே தினம் தினம் தொழிலாளர்களாக காணப்படுகின்ற ஓட்டோ சாரதிகள் இக்கொடிய நோய் காரணமாக தமது மாதாந்த தவணைப்பணம் கட்டமுடியாமல் தள்ளாடுகின்றனர்.

இவர்களுடைய பிரதான ஜீவனோபாயமாக திகழ்கின்ற போக்குவரத்து ஸ்தம்பிதம் நிலை காரணமாக இவர்கள் துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்காக அரசாங்கம் வழங்கிய சலுகைக்காலம் போதுமானதாக இல்லை.

தனியார் போக்குவரத்து பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் தமது போக்குவரத்தினை நம்பி பெற்ற கடனை கட்ட முடியாமல் தள்ளாடுகின்ரனர். வேலை இல்லாமல் வீட்டில் இருந்தாலும் தவணைப் பனத்தினை வங்கிகள் அறவிட்டு மீதமாக உள்ள பணத்தை மட்டுமே மீளப்பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது.

**சின்னச் சின்ன ஓட்டம் ஓடலாம் ஏண்டால், பொலிஸ் காரண் ஒரு பக்கம் பி ஏச் ஐ ஒரு பக்கம் துரத்துரான்கள். இவனுகளுக்கு ஒளிச்சி ஓடினாலும், இந்த லீசிங் காரண் விடாம ஏங்க இருந்தாலும் தேடித்தேடி வந்து இருக்கிறான். ஏன்னவோ குடும்பத்தைக் கொண்டு போறன்**

இது இப்படி இருக்க பாண், பருப்பு, சீனி, கேஸ், எரிபொருள், போக்குவரத்து என்று எல்லாவற்றுக்கும் விலை விண்ணைத்தொடும் அளவுக்கு அதிகரித்து இருக்கின்றது. அரசு சார்ந்த அமைப்புகளும் இதுவரை எதுவும் செய்ததாக தெரியவில்லை. ஆங்காங்கே ஊடகங்கள் வாயிலாக அனைவருக்கும் இலகு கடன், வங்கிக் கடன்கள் போன்றன வழங்கப்படுவதாக அறிக்கைகள் வந்த வண்ணமிருக்கின்றன. இது நம் சமுகத்தை இன்னும் கடனில் மூழ்கடிக்கும் செயர்பாடே

அரசினால் கிடைக்கும் நிவாரங்கள் தற்கால தீர்வாக அமைந்தாலும் இந்த அரச சலுகைகள் சாதாரண மக்களிடம் சென்று சேரும் வரை உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய தேவையும் உள்ளது. விவசாயிகள் (வாழை, மிளகாய், வெங்கயம், திராட்சை, பப்பாசி) மீன்பிடியாளர்கள், விற்பனையாளர்கள் (கடை தெரு வியாபாரிகள்), தின தொழிலாளர்கள் (கடலை விற்பனையாளர், காய்கறி விற்பனையாளர், பழ வியாபாரிகள், நடைபாதை வியாபாரிகள்) ஆகியோரின் நிலைமைகள் தொடர்பில் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய தேவை உள்ளது.

இப்படியான சூழ்நிலையிலும் சுகாதார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படை வீரர்கள், உணவு விநியோகத்தர்கள் இவர்களது சேவை மக்களால் போற்றத்தக்கது.

இங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், “எங்கட உற்பத்தி எல்லாம் இப்படியே கிடக்கு . கிழங்கு, கீரை, கத்தரி, தக்காளி இதெல்லாம் சரியான நேரத்தில புடிங்கி குடுத்தாத்தான் ஏதாவது மிச்சம் மீதி வரும்” என்கின்றனர்.

சந்தை வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில், “...இப்ப இந்தக் கண்ணுக்குத் தெரியாத நோயால எதையும் செய்ய ஏலாது. கடை எல்லாம் மூடி இருக்கு. இருந்தாலும் தவணைப்பணத்தில கொன்சமும் குரைச்சதா இல்ல. எல்லாம் கடனிலதான் போகுது” என்கின்றனர்.

ஓட்டோ சாரதி கருத்துத் தெரிவிக்கும்போது, “சின்னச் சின்ன ஓட்டம் ஓடலாம் எண்டால், பொலிஸ் காரண் ஒரு பக்கம் பி எச் ஐ ஒரு பக்கம் துரத்துரான்கள். இவனுகளுக்கு ஒளிச்சி ஓடினாலும், இந்த லீசிங் காரண் விடாம எங்க இருந்தாலும் தேடித்தேடி வந்து இருக்கிறான். என்னவோ குடும்பத்தைக் கொண்டு போறன்” என்றார்.

கோவில் அன்னதானங்களை நம்பி ஒரு வேளை உணவுக்காய் கையேந்தும் வயோதிபர் தெரிவிக்கையில், “எண்ட மெனெ, என்னவோ வருதாம் ... எல்லாரையும் வந்து வந்து புடிக்கிதாம்; அதால கோயில பூட்டினதா சொல்லுராங்க. நானும் இவடத்த தான் இருக்கன். என்ன ஒண்டும் புடிக்கிதும் இல்ல; இப்ப சாபாடும் இல்ல; ஆரோ ஒரு பொடியன் தான் வந்து சாப்பாடு தாரவன். நாங்க நம்பி இருந்த அன்னதான மடத்தையும் அந்த பேய் புடிச்சதாம் எண்டு சொல்லி மூடிப் பொட்டாங்கள்; சாப்பாடு சரியான கச்டமா போச்சுடா மேனே” என்றார்.

**ஏன்னவோ வருதாம் ... ஏல்லாரையும் வந்து வந்து புடிக்கிதாம்; நானும் இவடத்த தான் இருக்கன். ஏன்ன ஒண்டும் புடிக்கிதும் இல்ல; இப்ப சாபாடும் இல்ல; நாங்க நம்பி இருந்த அன்னதான மடத்தையும் அந்த பேய் புடிச்சதாம்...**





வங்கி அலுவலகர்ன் கருத்து, “எங்களுக்கிட்ட கடன் கேட்டால் நாங்கள் வங்கி சட்டத்துக்குட்பட்டு எல்லாம் சரியாக இருந்தால் கடன் குடுக்கிறம்; இருந்தும் குடுத்த கடனை இப்ப சில பேர் கட்டுறத்துக்கு ஏலாம இருக்கு; அதுக்காக நாங்களும் ஒண்டும் செய்ய ஏலாது; கடன் எடுத்தவங்க எப்படியும் கட்டித்தான் ஆகனும்; அதுக்காக சில பேர் இங்க வந்து தங்கட நகைகள் ஈட்டில் வைக்கிராங்கள். இது அரசுதான் ஏதாவது நிவாரன திட்டங்கள் செய்ய வேண்டும்”

இவ்வாறு, இந்தக் கொரோனா வைரஸ் பரவல் காலத்தில், ஒவ்வொருவரின் வாழ்க்கையும் துன்பங்கள் மிகுந்தனவாகவே காணப்படுகின்றன. இருந்தபோதிலும் துன்பங்களையும் கசவால்களையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு வாழ்வதே மானிட வாழ்வாகும்.

# தீர்க்கதரிசனம் இன்றேல் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகும்

ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், அம்மக்களிடத்தில் இருப்பவற்றை பாதுகாத்து, உரிமைகள், அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொடுத்து, எதிர்காலத் திட்டங்களைத் தீட்டி வழிகாட்டவேண்டும்.

இல்லையேல், அவர் பயணித்த பாதை அத்தலைவனின் மரணித்துக்குப் பின்னர் காணாமற்போய்விடும். பல அரசியல் கட்சிகளும் தலைவர்களும் அவ்வாறே காணாமற்போய்விட்டனர். இன்றேல் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

எமது நாட்டை பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளை ஆரம்பித்த ஒருசில தலைவர்கள் உயிருடன் இருந்தாலும், அவ்வியக்கம் காணாமற் போய்விட்டது. ஆதரவாளர்கள் வெவ்வேறு வர்ணக்கொடிகளை ஏந்திக்கொண்டு, மற்றொரு தலைவனின் பின்பாக பயணித்து கொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர்களை, ஓரணியில் திரட்டுவது இயலாத காரியமாகவே இன்றுவரையும் இருக்கிறது. ஆரம்பத்தில் ஒட்டிக்கொண்டாலும் இடைநடுவில் கைகழுவி விட்டுச்சென்றுவிடுவர். முன்னணியும் காணாமற்போய்விடும். அதற்குப் பிரதான காரணம் முறையான அடித்தளம் இடாமையாகும்.

ஓர் அரசியல் கட்சியின் தலைவன், தனக்கு அடுத்தடுத்த பதவிநிலைகளை நிரப்பாவிடின், தகுதியானவர்கள் இடமளிக்காவிடின், அக்கட்சி ஆணிவேருடன் சாய்ந்துவிடும் என்பதே உண்மையாகும். ஆதலால்தான், எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் செயற்படவேண்டும் என்கின்றனர்.

சிறுபான்மை இனத்தை பார்க்குமிடத்து மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை, குறைந்துகொண்டே வருகின்றது. பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகளிலும் இதேபோன்ற நிலைமைதான் ஏற்படுகின்றது. வடக்கு, கிழக்கில் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை, வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

இந்நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களில் (2015 - 2019) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் 52 ஆயிரத்து 183 குடும்பக்கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மலையகத்தில் திட்டமிட்ட முறையில் மிகவும் நாசுக்கான முன்னெடுக்கப்படுகின்றது.

வாக்காளர்களாக பதிவுச் செய்வதான வயது வந்தவுடன், வாக்காளர் இடாப்பில் பெயரை பதிவுச் செய்துகொள்ளவேண்டும். வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மாவட்ட ரீதியில் மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது. வடக்கில் சில மாவட்டங்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைந்து, தெற்கில் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

மலையகத்தை பொறுத்தவரையில், திட்டமிட்ட குடியேற்றங்கள், தூரநோக்கற்ற அரசியல் தீர்க்கதரிசனம் இல்லாத தலைமைத்துவங்களால், எதிர்காலங்களில் பிரதிநிதித்துவத்தை இழக்கவேண்டியது நிச்சமாக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே திட்டமிட்ட குடும்பக்கட்டுபாடுகள், அதில் பெரும் தாக்கத்தை செலுத்தும்.

மலையக மக்களை பிரிதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள், பிரச்சினையொன்று ஏற்பட்டுவிட்டால், ஒருவருக்குப் பின்னர் ஒருவராக அறிக்கையிடுவர். புதியதொரு பிரச்சினைகள் ஏற்படுமாயின் அதனைத் தாவி பிடித்துக்கொள்வர். இன்னும் சிலர், ஆளும் தரப்பில் இருக்கும் மலையக பிரதிநிதிகளை நோக்கி கை விரலை நீட்டிவிடுவர். இது காலந்தொட்டு நடந்துவருகின்றது. இந்நிலைமை மாறவில்லையெனில், எதிர்காலம் கேள்விக்குறியாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஐ.நா வரை எதிரொலிக்கும் தமிழர் தரப்புக் குழப்பம்

**லக்ஸ்மன்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இம்மாதத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தொடர் காலத்தோடு உடைந்து சிதறிவிடும் என்ற எண்ணப்பாடு தமிழ்த் தேசிய எதிர்ப்புவாதங்கொண்டவர்களிடம் காணப்படுகிறது. இவ்வாறான சிந்தனை அக் கூட்டமைப்பு உருவானது முதலே இருக்கின்றதொன்றாகும். .

இதற்குத் தூபமிடுமாப்போல் தொடர்ந்தும் அது தொடர்பான விமர்சனங்களும் கருத்துகளும் ஊடகங்களில் வெளிவந்தவண்ணமே இருக்கின்றன. தமிழ்த் தேசிய நிலைப்பாடு என்பது, ஒருபோதும் தமிழர்களின் இரத்தத்தில் இருந்து இல்லாமல் போகிறதொன்றல்ல என்பது, தமிழ்த் தேசியவாதிகளின் நிலைப்பாடு.

மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் 46/1 பிரேரணை பற்றிய மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதில் முக்கியமாக ஆதாரங்களைத் திரட்டுவதற்கான அதிகாரத்தை மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கு கடந்த கூட்டத்தொடரில் மனித உரிமை பேரவை வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில் முக்கியமாக கருதப்படுகின்ற மனித உரிமை பேரவையின் அமர்வில் நீதி பொறிமுறைக்கான நடவடிக்கைகள் காத்திரமான முன்னேற்றத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலைமையை கடுமையாக ஆய்வு செய்து, உண்மையான மனித உரிமை முன்னேற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்தும் குரல்கொடுத்த வண்ணமுள்ளன. இருந்தாலும் 2009களுக்குப் பின்னரிருந்து தமிழ் மக்கள் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையை நம்பிய எதிர்பார்ப்புக்கு இன்னமும் முடிவு கிடைக்கவில்லை.

இதில் விசேசம் என்னவென்றால், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா போன்ற சில நாடுகள் மனித உரிமை நிலைப்பாட்டில் காட்டும் அக்கறையை ஏனைய நாடுகள் காட்டுவதில்லை என்பதுதான். வெறுமனே ஒரு சில நாடுகள் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஏன் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களது கொள்கை சார்ந்ததே. இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச மனித உரிமை கடமைகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை கொடுக்க தங்கள் விருப்பத்தை மற்ற நாடுகள் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் அதன் மறுதலை.

பல தசாப்தங்களாகத் தொடரும் இலங்கையின் இனமுறுகலுக்கு போர் ஓய்வு முடிவாக இருக்குமென்றே இலங்கையின் ஆளும் தரப்பு நம்பிக்கை கொண்டிருந்தது. இருந்தாலும் போர் மௌனிக்கப்பட்டு 12 வருடங்களாகியும் தமிழ் மக்களுக்காக ஒரு தீர்வு கூட உருவாக்கப்படவில்லை. நடைபெறும் கண்துடைப்புகள் பயனற்றவை என்பது வெளிப்படுத்தப்பட்டாலும் ஆளும் தரப்பினரின் நிலைப்பாட்டிலோ செயற்பாட்டிலோ மாற்றம் எதுவுமில்லை.

சர்வதேச சமூகத்திற்கும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் வழங்கிய உறுதி மொழிகளை தொடர்ந்தும் மதிப்பதாக குறிப்பிடும் இலங்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்காக தம் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரித்து, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலின் முன்னேற்றங்களை தெளிவுப்படுத்தி, 13 பக்கத்திலான அறிக்கையை கொழும்பில் உள்ள அனைத்து இராஜதந்திர மையங்களுக்கும் கடந்த வாரத்தில் அனுப்பி வைத்துள்ளது. இந்த நிலையில்தான், இன அழிப்பு, மனிதாபிமான குற்றம், உரிமை மீறல், போர்க்குற்றங்கள் போன்ற முக்கிய விடயங்கள் குறித்தான முடிவுக்காக தமிழ்த்தரப்பு ஏங்கிக் கொண்டிருக்கிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஸ்ரீ லங்காவை பாரப்படுத்துவதே ஒரே வழி என்கிறது தமிழர் தரப்பின் ஒரு பகுதி.

அதே போன்று காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் உருவாக்கப்பட்டாலும் அதன் செயற்பாடின்மை, இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் கவனிக்கப்படவேண்டும். இவ்வாறான விடயங்களைக் கண்காணிக்க மனித உரிமை ஆணைக்குழு ஒரு விசேட தூதுவரை நியமிக்க வேண்டும். அத்தோடு , வடக்கு கிழக்கில் மனித உரிமை ஆணையக்கத்தின் ஒரு கள அலுவலகம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள்; ஐ.நாவின் அமர்வுக்காக முன்வைக்கப்படுகின்றன.

அதே போன்று வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் பல்வேறு பரிணாமங்களில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்குதல் குறித்து ஐ.நா கவனத்திலெடுக்க வேண்டும். தமிழர்களின் தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்கும் அரசியலமைப்பு மூலமே தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில்தான், தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையை அனுப்பியது என்ற கருத்து வெளிக்கிளம்பியது. இதன் வெளிப்பாடோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்குள் குழப்பம். அதிலும் இலங்கை தமிழரசு கட்சிக்குள்ளும் பூகம்பம் வெடித்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகளாக ஆரம்பத்திலிருந்த டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகள் இந்த நிலைப்பாட்டுக்கு முற்றிலும் எதிரானவர்களாக இருக்கின்றனர். ஒட்டு மொத்த தமிழ் மக்களும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைவதன் முக்கியம் குறித்து முயன்றுவரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் எல்லோரையும் இணைத்து ஓர் அறிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்ட வேளை, ஏற்பட்ட குழப்பம், தாமதம் காரணமாக இலங்கைத் தமிழரசு கட்சியின் கையொப்பம் இல்லாமல் ஒரு கடிதம் அனுப்பப்பட்டதானது, இந்தக் குழப்பத்தை மேலும் துண்டிவிட்டது. அக்கடிதத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி வி விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம், பாராளுமன்ற மன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டிருந்தனர்.

இவ்வறிக்கையில், 46/1 பிரேரணைக்கு பின்னராக தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தமிழினத்துக்கு எதிரான விடயங்களான காணி அபகரிப்பு, தொல்லியல் சார்ந்த நடவடிக்கைகள், நினைவேந்தல்களுக்கான தடைகள், பயங்கரவாத தடை சட்டத்தின் அடிப்படையிலான கைதுகள், சட்ட நடவடிக்கைகள், தடுத்து வைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோரை தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு, பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி பயணத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள், கைதுகள், அண்மையில் அரசினால் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தாலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாய நிலைகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், இலங்கையில் தமிழ் மக்கள் மீது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு நீதி கோரி உலக நாடுகளுடன், கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்றோம் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக கிடைத்தது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருந்தாலும் எல்லோரையும் அனுசரிக்கும் நிலைப்பாடு தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் தேவையில்லை என்பது ஏனையவர்களின் பிடியாக இருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையோ, பிளவோ, தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையோ சர்வதேச அளவில் எதனையும் செய்துவிடாது என்பதுதான் கரிசனை கொண்டோரின் கருத்தாகிறது.

இலங்கையின் பொறுப்புக்கூறலை சர்வதேசம் உறுதிப்படுத்துகின்றதற்கான முக்கிய முனைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் இம்மாத அமர்வுக்கு தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டதான விடயங்கள் ஒவ்வொரு வருடமும் நிகழ்வதைப்போலல்லாமால் காத்திரமானதாக இருக்க வேண்டும்.

அந்தவகையில், இம்முறை ஜெனீவாவில் இலங்கையைப் பற்றி விவாதத்தில், பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான சித்திரவதைகள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தல்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை தளர்த்துதல் அல்லது மாற்றுதல், தடுத்துவைப்புக்கள், இந்த ஆண்டு நிகழ்ந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டம், அதன் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்ற சம்பவங்கள் என பலவும் கலக்கப்போகின்றன. அதன் பிரதிபலிப்பு எப்படி என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## கடிதங்கள்

### ஊரடங்கில் இயற்கை வளங்கள் கடத்தல்

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் பனையடி கிராமத்திலும் திட்டமிட்ட சட்டவிரோத கடற்கரை மணல்,மற்றும் குடியிருப்பு காணிகளிலும் பாரிய அளவில் மணல் அகழ்வு நடைபெறுவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா கால ஊரடங்குச்சட்டம் அமலில் உள்ள காலமென்பதால் அதனை பயன்படுத்தி சிலர் இந்த சட்டவிரோ செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அதிகாலை நேரங்களில், கடற்கரை பகுதிக்கு அண்மையில் உழவு இயந்திரங்களில் ஏற்றி அதன் பின் டிப்பர் ரக வாகனங்களில் பரிமாற்றம் செய்யப்பட்டு, இராணுவ சோதனை இல்லாத வீதிகளால் கொண்டு செல்வப்படுவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட பத்து லோட் மணல் வெளி மாவட்டத்திற்கு செல்வதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இந்த மணல் அகழ்வால் பிரதேசம் பாரிய அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. கரையோரப் பகுதியாக காணப்படுவதால் சுனாமி போன்ற பேராபத்துகள் ஏற்படும் போது கடல் அரிப்பால் கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயமும் ஏற்படும் என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் விரைந்து களப்பணி மேற்கொண்டு, மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதுடன் கிராமத்தில் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பாரிய அழிவையும் தடுத்து நிறுத்துவதுடன் குறித்த விடயத்திற்கு நிரந்தரமான தீர்வை பெற்றுத்தரும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

செ. கீதாஞ்சன்

வறுமை ஒழிப்பு புரட்சியை ஏற்படுத்திவரும்

# பசுமை இல்லம்

## வடக்கு, கிழக்கில் வீட்டுவாசல்கள் தோறும்...



வ. சக்திவேல்
shagthivel@gmail.com






புலம் பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடன் வடக்கு> கிழக்கு முழுவதும் இயங்கிவரும், 'பசுமை இல்லம்' எனும் அமைப்பால் கொவிட் - 19 உக்கிரமடைந்துள்ள இக்காலத்தில், மக்கள் வீட்டிலிருக்கும்போது வீணாக பொழுதைக் கழிக்காமல், வீட்டுத் தோட்டப் பயிற்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நல்லின பயிர் கன்றுகள் வழங்கப்பட்டு வரப்படுகின்றன.

இதன்போது பைகளில் வைத்து பராமரித்து உற்பத்தி செய்யக்கூடிய இயற்கை முறையில் உரங்களை இட்டு உருவாக்கிய நாற்றுக்களும் அவற்றுக்குரிய பைகளும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வரப்படுகின்றன.

"நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரமடைந்துள்ள இக்காலகட்டத்தில், மக்கள் அநாவசியமாக வெளியில் திரிவதை விட்டு விட்டு, வீட்டிலே இருந்து சுயமாக வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைகளை, இயற்கை முறையில் மேற்கொண்டு, பயனடைய வேண்டும். இச்செயற்பாட்டை பயனாளிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளும் பட்சத்தில், நாம் நேரடியாக வீடு வீடாகச் சென்று, பார்வையிட்டதன் பின்னர் மேலும் அவர்களின் முயற்சிகளுக்கு ஏற்ப ஆடு, மாடு, கோழி, உள்ளிட்ட மேலதிக உதவித் திட்டங்களையும் வழங்கவுள்ளோம்" என பசுமை இல்லத்தின் தலைவர் ப.கோணேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

"பிறரிடம் கையேந்தும் நிலையிலிருந்து எமது மக்கள் விடுபட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலும் பசுமை இல்லம் எனும் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். எமது இச்செயற்றிட்டத்தின் மூலம் மக்களுக்கு பயன் தரும் மா, மாதுளை, மற்றும் கத்தரி, மிளகாய், கமுகு, கறிமிளகாய், வெண்டி, உள்ளிட்ட மரக்கறிப் பயிர் கன்றுகளை வளங்கி வருகின்றோம்.

இலங்கையிலே வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாவட்டங்களாக மட்டக்களப்பு மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களை எவ்வாறு வாழ்வாதார ரீதியாக உயர்த்துவது என்ற கேள்வி எங்களிடமிருந்து எழுந்தது. அதற்கிணங்க நாம் திட்ட வரைபுகளை எழுதி, சுவிஸ் நாட்டிலே வாழ்கின்ற எமது உறவுகளிடம் கையளித்ததன் பெயரில் எமக்கு அவர்கள் இத்திட்டத்திற்கு உதவிகளை நல்கி வருகின்றார்கள். அந்த வகையில்தான் பசுமை இல்லத்தினூடாக வடக்கு, கிழக்கு முழுவதும் எமது மக்களை தற்காப்பு பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பவதற்கு நாம் செயற்பட்டுக் கொண்டு வருகின்றோம்.



பசுமை இல்லத்தின் கீழ் கிராமங்கள் தோறும் பசுமை கிராமியக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வழங்கப்படுகின்ற பயிர் கன்றுகளையும் கிராமங்களையும் நன்கு அவதானித்து கண்காணிக்கப்பட்டும் வரப்படுகின்றன. அந்த வகையில் பசுமை இல்லத்தின் செயற்பாடுகள் முதலிடத்தில் கிளிநொச்சி மாவட்டமும் இரண்டாவது இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. நாம் இவ்வாறு வீடுகளிலே பைகளில் வைத்து தோட்டங்களை மேற்கொள்ளும் மக்களுக்கு பண பரிசுகளையும், மற்றும், கோழி, ஆடு, மாடு, உள்ளிட்ட ஏனைய வாழ்வாதார உதவித்திட்டங்களையும் எதிர்காலத்தில் வழங்கவுள்ளோம்.

எமது செயற்பாடுளைத் தட்டிக் கொடுப்பதற்கு யாருமில்லை. வறுமையில் குடும்பமே இறந்து விட்டது என்றால் ஊடகங்கள் வந்து குவிந்துவிடும், வாழ்வாதார ரீதியாக நாம் எமது மக்களை தற்காப்பு பொருளாதார ரீதியாக மேற்கொள்ளும் உதவிகளுக்கு உந்துசக்தியளிக்க ஊடகங்களோ வேறு யாரும் உதவுவதில்லை.

அண்மையில் கிளிநொச்சியில் ஒரு தாய் தனது 3 பிள்ளைகளை கிணற்றில் தூக்கி வீசிய சம்பவம் இடம்பெற்றது. இதற்கு காரணம் வறுமை. மட்டக்களப்பு மாவட்டத்திலும், அண்மைக்காலமாக நுண்டன் பிரச்சினை தலை தூக்கியுள்ளது. இதனால் பலர் தற்கொலை செய்திருந்தார்கள். எமது பசுமை இல்லச் செயற்பாடுகளுக்கு அரச நிறுவனங்களும் பொதுமக்களும் ஆதரவு வழங்கினால் நுண்கடன் எனும் கொடிய நோயை இல்லாதொழித்துவிடலாம். இந்த நுண்கடன் எமது மக்கள் மீதும், எமது மண் மீதும் திணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நுண்கடன்களால் எமது மக்களை மீண்டும், மீண்டும் வறுமைக்குட்படுத்தி, அடிமையாக்குகின்ற நிலமைதான் ஏற்படுகின்றன.

எனவே நாம் வழங்கி வரும் ஒரு பையில் நடப்படுகின்ற பயிரிலிருந்து 10 கிலோகிராம் வரையில் விளைபொருட்களைப் பறிக்கக் கூடிய கத்தரி, மிளகாய், கறிமிளகாய், உள்ளிட்ட பல பயிர் கன்றுகரை நாம் வழங்கி வருகின்றோம். அதிலிருந்து மக்கள் தமது உணவுக்காக எடுத்துக் கொள்வதை விடுத்து ஏனையவற்றை விற்பனை செய்தும் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியும். அதிலிருந்து கிடைக்கும் சிறிய வருமானத்தை சேமியுங்கள்; மாறாக நுண்கடன்களைப் எடுக்க வேண்டாம், நுண்கடங்கள் இரத்தம் குடிக்கும் அட்டையைப் போல் மக்களை உறிஞ்சிவிடும். அதனை மக்கள் விளங்கிச் செயற்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என பசுமை இல்லத்தின் வடக்கு கிழக்கு இணைப்பானர் க.வினோத்குமார் தெரிவிக்கின்றார்.

வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு உதவுவதற்காக பல நிதிநிறுவனங்களும் கம்பனிகளும் மக்கள் மத்தியில் குழுக்களாகவும் நேரடியாகவும், கடனுதவிகளை சுயதொழில்களுக்காக வழங்கி வந்தாலும், அதனைப் பெற்று சிலர் நன்மையடைகின்ற போதிலும், பெரும்பாலான மக்கள் அக்கடனை மீளச் செலுத்த முடியாத சூழலால் தற்கொலை வரைக்கும் சென்றுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் பசுமை இல்லத்தின் செய்றபாடுகள் வரவேற்கத்தக்கதாகும்.

நமது சமுதாயம் விவசாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகும். நானும் விவசாயப் பீட மாணவி. வேளாண்மை, தாவரங்கள், மரங்கள் வளர்த்தால்தான் இனிமேல் இயற்கையில் நின்று பிடிக்கலாம் என்ற எண்ணக்கரு சமுதாயத்தில் உருவெடுத்து விட்டது.

ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை பெரிய அளவில் வயற்காணி உள்ளவர்கள் வேளாண்மை செய்துவந்தாலும், வீடுகளிலுள்ள சிறிய நிலப்பரப்புகளில் பைகளில் தானியங்களை இட்டு வீட்டுத் தோட்டங்கள் செய்து குடும்ப வருமானத்தோடு, ஒருபகுதி உணவுத் தேவையையும் நிவர்த்தி செய்யலாம்.

பசுமை இல்லத்தின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதாகும். இந்த இல்லத்தினால் வழங்கப்படும் பயிற் கன்றுகளை வைத்து மக்கள் நன்மையடைய வேண்டும். வழங்கப்பட்டுவரும் பயிற் கன்றுகள் உடன் பலன் தரக்கூடியதாக இல்லாவிட்டாலும், அதனுள் ஊடுபயிற் செய்கைகளையும் மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

இப்பகுதியில் காட்டுயானைகளின் அட்டகாசங்கள் உள்ளன. அதனால் பயிர்களும் நாசமடைகின்றன. யானை வேலிகள் அமைக்கும் செயற்பாடுகளும், முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பயிர்கன்றுகளிலிருந்து விளைவைப் பெற்று வறுமையைக் குறைப்பதற்கு மக்கள் முயற்சி எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி தெரிவிக்கின்றார்.

மேற்படி துறைசார்ந்தவர்கள் தெரிவித்தது போன்று பொதுமக்களும் வறுமை, வறுமை, என முடங்கிக்கிடக்காமல், தற்கால கொரோனா சூழலுக்கு மத்தியில் தத்தமது வீடுகளில் வீட்டுத் தோட்டங்களையும், அல்லது பசுமை இல்லம் கிராமங்கள் தோறும் வழங்கி வரும் பயிர்கன்றுகளையும் பெற்று வீடுகளிலே சிறிய சிறிய தோட்டங்கள் வைத்து அதிலிருந்து உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, குடும்ப பொருளாதாரத்தையும் மேபடுத்துவதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் என்பதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

வெளியில் மக்கள் கூட்டம் மிகுந்த இடங்களில் ஓடி ஓடி வேலை செய்து கொவிட் - 19 தொற்றுக்களைப் பெற்று நோயாளியாகாமல் தற்காலத்திற்கு ஏற்றாற்போல் அனைவரும் முடிந்தவரையில் வீடுகளிலே இருந்துகொண்டு இயற்கை உரங்களை இட்டு வீட்டுத் தோட்டங்களைச் செய்து ஆரோக்கியமாக வாழ்ந்தால் நாடும் ஆரோக்கிமாக மிளிரும் என்பதோ, இப்பசுமை இல்லத்தின் செயற்பாடுகளை வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து வீடுகளிலும் மிளிரச் செய்வதற்கு ஏனை புலம் பெயர் அமைப்புக்களும், தனவந்தர்களும், கைகொடுத்து உதவும் பட்சத்தில் அது மேலும் விஸ்த்தீரணம் பெரும் எனலாம்.







பெருந்தலைவர் அமரர் சி.மூ. இராசமாணிக்கம்

# தமிழ்த் தேசியத்தை வாழ்வித்தவர்



கி. துரைராசசிங்கம்
சட்டத்தரணி, முன்னாள் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

சபல இன, மத, மொழி, பண்பாடுகளைக் கொண்ட நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு கூட்டாட்சி (சமஷ்டி) என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

இந்த அடிப்படையிலே தான் இலங்கையின் அரசிலமைப்பு இருக்க வேண்டும் என தந்தை செல்வா சொன்னார். நாட்டில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒரு பிரதேசத்தை இன்னுமொரு பிரதேசம் சுரண்டாதிருத்தல் என்ற விழுமியங்கள் பேணப்படும். ஒட்டுமொத்த நாடும் முன்னேற்றமடையவும், நாட்டில் தேசிய உணர்வு செழிப்படையவும் இதுவே சிறந்த முறைமை என உறுதி பூண்டார். இதை அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருக்கும் போதே கூறினார்.

ஆனால் 1948ல் சோல்பரி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட போது நம்மவர் எவரும், கூட்டாட்சி முன்மொழிவைச் செய்யாதிருந்தமை அபாக்கியமே. இது தொடர்பில் தந்தை செல்வாவும் தன் வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தோற்றத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கெங்கணும் கூட்டாட்சிக் கொள்கை பரப்புரை செய்யப்பட்டது. ஆரம்ப காலத்தில் பல்வேறு எதிர்ப்பலைகள் தோன்றின. மக்களின் ஆர்வம் இக்கொள்கையின்பால் இருந்ததால் எதிர்ப்புகள் அடங்கின. வடக்கில் போலவே கிழக்கிலும் கூட்டாட்சியின் தேவை உணரப்பட்டு மக்கள் ஆதரவு பெருகியது. கிழக்கிலே இம்முயற்சியின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் முதன்மை பெற்று விளங்கியவர்களில் அமரர் சி.மூ. இராசமாணிக்கம் அவர்களும் ஒருவராவார்.

1956களிலிருந்து, சி.மூ.இராசமாணிக்கம், பொ.மாணிக்கவாசகம் போன்றோரோடு மட்டு நகரிலும், கிராமங்களிலும் தோற்றம் பெற்ற பேச்சாளர்களும் கூட்டாட்சிக் கொள்கையை மக்கள் மனங்களில் படரவிட்டனர். கட்சிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர்.

எஸ்.யு.எதிர்மனசிங்கம் (பட்டிருப்பு) அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்களம் மட்டும் தீர்மானத்தால் கட்சியை விட்டு வெளியேறினார். களனி மாநாட்டில் 18 மாசி 1956ல் சிங்களம் மட்டும் தீர்மானம் நிறைவேற்றப்படமுன் இது நிகழ்ந்தது.

இதே நிலைப்பாட்டையே வி.நல்லையாவும் (கல்குடா) எடுத்திருந்தார். இவர்களெல்லாம் 20 மாசி 1956ல் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய ஹர்த்தால் மற்றும் கறுப்புக் கொடிப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.


சி.மூ. இராசமாணிக்கம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் கொள்கை முக்கியம். அப்பொழுதும், இப்பொழுதும். சிலர் பரப்புரை செய்வது போல் கட்சியில் யாழ் மேலாதிக்கம் உண்டெனில் அது முறியடிக்கப்பட வேண்டிதொன்றே. சில நிகழ்வுகளை உதாரணம் காட்டிச் சிலர் தமது பிற்போக்கான கருத்துக்களை மேலோங்கச் செய்யும் எத்தனிப்பு முறியடிக்கப்பட வேண்டும். அதன் பொய்மையை தமிழ் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். ஏனெனில் தமிழ்த் தேசியம் மிக முக்கியமானது. கட்டிக் காப்பாற்றப்பட வேண்டியது.

இவற்றையெல்லாம் முறியடித்துக் கொண்டு, இலங்கைத் தேசியத்தின் நஞ்சாய் ஒற்றையாட்சிக் கோட்பாடு அமையும் என்ற கொள்கையை தந்தை செல்வா முன்வைத்தார். சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் இக்கொள்கையை மக்கள்பாற் கொண்டு சென்றார். 1956 சித்திரையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டார். வெறும் 106 வாக்குகளால் தோல்வியுற்றார்.

அவரது தேர்தல் பரப்புரையின் உண்மைகளை அதிக தாமதமில்லாமலே மக்கள் உணர்ந்தனர். 1956 ஆனி 05ல் வந்த சிங்களம் மட்டும் சட்டம் இவருக்கு எதிராக வாக்களித்த மக்களை கைபிசைந்து நிற்க வைத்தது.

1952ல் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது சுயேட்சையாகக் கத்தரிக்கோல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 1949ல் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் செயற்பாட்டுக்கு வந்தது. டி.எஸ்.சேனாநாயக்கா, பிரதமர் இதனைத் திட்டமிட்டார்; தொடங்கியும் வைத்தார். பட்டிப்பளை ஆறே கல்லோயா எனப் பெயர்மாற்றம் பெற்றது. அது தமிழர்தம் பூமி. கி.மு 3ம் நூற்றாண்டில் தமிழ்க் குடியேற்றங்களால் செழிப்படைந்திருந்த பகுதி. கி.பி 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மன்னன் மாகோனின் ஆட்சியில் வளர்ச்சி கண்ட பூமி.

டி.எஸ்.சேனநாயக்காவின் நிரந்தரச் செயலாளர், சேர்.கந்தையா வைத்தியநாதன் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், கி. அழகரெத்தினம் நில அளவைப் பணிப்பாளர் நாயகம், கலாநிதி எஸ். புரோக்கியர் என்போர் பணியைத் திறம்பட நிறைவேற்றினர். நாற்பது கிராமங்களை அமைப்பதற்கான வரைபடம் தயார். ஆறு கிராமங்கள் தான் தமிழர்கட்கு என்றபோது தான் திட்டம் வரைந்த குழுவினர் திகைத்தனர். நான்கைந்தைக் கூட்டிக் கேட்கக் கூட அவர்களால் முடியவில்லை!

அப்போது மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்த எஸ். யு.எதிர்மனசிங்கம் (பட்டிருப்பு), அஹமட்லெவ்வை சின்னலெவ்வை (மட்டக்களப்பு), வி.நல்லையா (கல்குடா) அதிகளவு குடியேற்றக் கிராமங்கள் இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததாகத் தெரியவில்லை.

ஆனால், தமிழரசுக் கட்சியினர் வடக்கில் இருந்து வந்து அப்போதே அவர்களுடன் தொடர்பில் இருந்த செ.இராசதுரை அவர்களையும் அழைத்துக் கொண்டு கல்முனை, அட்டாளச்சேனை, போன்ற இடங்களுக்கு வந்தார்கள். நடைபெறவுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் பற்றி அங்கிருந்த தமிழ் முஸ்லிம் மக்களுக்கு விளக்கினார்கள். மக்களும் விழிப்படைந்தார்கள்.

சி.மூ.இராசமாணிக்கம் இன்னும் தமிழரசுக் கட்சியில் சேரவில்லை. எனினும், அவரது உணர்வுகள் தமிழரசில் தான் ஒன்றியிருந்தன. தனது மறைமுக ஆதரவை அவர் வழங்கினார். 1952 பொதுத் தேர்தலில் சுயேட்சையாக வெற்றி பெற்றார். தமிழர்கட்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களிலும் அரசின் ஒத்துழைப்பை நாடாமலே மக்களைக் கொண்டு குடியேற்றினார். அரச உதவியை நாடினால் அவர்கள் சாக்குப் போக்குச் சொல்லி தாமதம் செய்து அந்தக் கிராமங்களிலும் சிங்களவர்களையே குடியேற்றுவார்கள் என்பதை அவர் அனுபவம் மூலம் அறிந்து வைத்திருந்தார். காணித் திணைக்களத்தில் பணிப்பாளராகப் பணிபுரிந்த அனுபவமும் அவருக்கு இவ்விடயத்தில் உதவியது.

மேற்குறித்தவாறு 1956 பொதுத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோற்ற போதும், அவரது மனம் கவர்ந்த தந்தை செல்வாவின் கொள்கைகளைப் பரப்புவதில் ஆர்வத்தோடு செயற்பட்டு வந்தார்.

இவ்வேளையில் 1956 ஆனி 05ல் காலிமுகத் திடலில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கெதிரான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் இடம்பெற்றது. காடையர்கள் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர். பின் இது இனக்கலவரமாக உருவெடுத்தது.

கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய தமிழர்கள் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். காடையர்கள் இராணுவம் சகிதம் அம்பாறையின் எல்லைக் கிராமமான துறைநீலாவணையைத் தாக்கும் எண்ணத்துடன் துறைநீலாவணை முகப்பை அண்மித்தனர். எதிர்பாராத திசைகளிலிருந்தெல்லாம் தமிழரின் துப்பாக்கி வேட்டுக்கள் கிளம்பின. காடையர்கள் திரும்பி ஓடினர். மக்களின் பின்னணியிலே சி.மூ. இராசமாணிக்கம் நின்றார்.

இரண்டொரு நாட்களின் பின் இராணுவத் தளபதி ஒருவரின் தலைமையில் இராணுவ அணியொன்று துறைநீலாவணையைச் சுற்றி வளைத்தது. சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் நிகழ்விடத்துக்குச் சென்றார். தளபதியைக் கண்டார். தன்னை வீழ்த்திய பின்தான் தனது மக்களைத் தொட முடியும் என தனது சட்டைப் பொத்தான்களைக் களற்றி தளபதிக்கு தன் மார்பைக் காட்டிச் சுடும்படி கர்ச்சித்தார். தளபதி அடங்கினார். வந்த வழியே திரும்பினார்.

முன்னர் குறிப்பிட்டது போல 1956 மாசி மாதத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் போராட்டங்கள், மாநாடுகள், முக்கிய பரப்புரைகளிலெல்லாம் சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டார். 1960 பங்குனி மற்றும் 1960 ஆடிப் பொதுத் தேர்தல்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு இரண்டு தேர்தல்களிலும் வென்றார்.

சி.மூ.இராமாணிக்கம் அவர்கள் சிறந்த கல்விமமான். இலங்கைகப் பேராதனைப் பல்ககலைக்கழத்தில் கற்றுப் பொருளாதாரத் துறையில் கலை இளவல் சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் பல்கலைக் கழகத் தேர்வில் சித்தியெய்தி விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். காணி ஆணையாளர், மாவட்டப் பதிவாளர் என்னும் பதவிகளையும் வகித்தவர். மக்களின் வேண்டுகோளால் அரசியலில் ஈடுபட்டவர். தந்தை செல்வாவின் கொள்கைகளால் கவரப்பட்டு தமிழ்த் தேசியத்தில் தோய்ந்தவர். இதனால் நிலையான அரசியற் கொள்கையோடு தமிழ் மக்களுக்காய் தன்னை அர்ப்பணிக்கத் தலைப்பட்டார்.

இவரின் ஆற்றலையும், ஆளுமையையும் அடையாளம் கண்ட தமிழரசுக் கட்சி 1961, 1962, 1969 களில் நடைபெற்ற கட்சியின் மூன்று மாநில மாநாடுகளிலும் கட்சித் தலைவராக அவருக்கு மகுடம் சூட்டியது. கடைசியாக 1972ல் நடைபெற்ற சிறப்பு மாநாட்டுக்கும் அவரே தலைமை தாங்கினார்.

# முறிகண்டி கச்சான்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மிகவும் பழைமை வாய்ந்ததும் மத வேறுபாடுகளின்றி எல்லோராலும் வழிபடும் முறிகண்டி பிள்ளையார் கோவில் வளாகத்தில் உள்ள வர்த்தகர்கள், இன்றைய சூழலில் தொழிலிழந்து நிர்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பலதரப்பட்ட வர்த்தகம், வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுத்து வந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் தொடர்சியாகப் பாதிக்கப்பட்டு, எதுமற்ற நிலையில் வங்கிக்கடன், நுண்நிதிக்கடன் எனப் பல்வேறு பட்ட கடன்களைப் பெற்று, தமது வாழ்வாதாரத் தொழில்களை ஆரம்பித்த போது, 2020ஆம் ஆண்டு முதல் இன்று வரை தொடரும் கொவிட் -19 அச்சுறுத்தல், இவர்களது வாழ்வாதாரங்களைச் சிதைத்துள்ளது.

இலங்கையின் பிராதானமான போக்குவரத்து மார்க்கமாக அமைந்துள்ள யாழ்ப்பாணம் - கண்டி ஏ-09 நெடுஞ்சாலையில், வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் ஏறக்குறைய 150 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. வவுனியாவிலிருந்து திருமுறிகண்டி பிள்ளையார் கோவில் ஏறத்தாழ 80 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. அதாவது, முறிகண்டிபிள்ளையா கோவிலானது, வவுனியாவுக்கும் யாழ்பாண நகருக்கும் இடையே ஏறைக்குறைய மத்தியில் அமைந்த பிரதேசமாக கானப்படுகின்றது.

இந்த வீதி வழியாகப் பயணிக்கும் வாகன சாரதிகள், பொதுமக்கள் என அனைவரும் களைப்பு, சோர்வு, அசதி, மன உளைச்சல் இவைகளைக் களைந்து, முகம் கழுவி பிள்ளையாரை பிராத்தனை செய்து, உணவுண்டு செல்லும்போது, மீண்டும் புத்துணர்ச்சியுடன் களைப்பின்றி தமது பயணத்தை புதிய உத்வேகத்ததுடன் மேற்கொள்வதுடன் அந்தப் பயணத்தில் ஒருவித திருப்தியையும் உணருகின்றனர்.



இங்கே சுடச் சுட விற்பனை செய்யப்படும் கச்சானுக்கு தனியான ஒருசுவையுண்டு. வெளிநாடுகளிலிருந்து முறிகண்டியை கடந்து வரும் உறவினர்கள் யாராக இருந்தலும், இந்தக் கச்சாளை வாங்காமல் செல்ல மாட்டார்கள். முறுகண்டிக் கச்சான் என்பது, அவர்கள் பரிமாறும் அன்பின் ஓரங்கமாகும்; இந்த வழக்கம் இன்றுமுள்ளது.

மிகச் சிறிய கோவிலில் குடி கொண்டிருக்கும் விநாயகரின் மகிமையோ பெரிது. 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மிக்கவர்'. பொங்கல், சோறூட்டல் போன்ற சடங்குகளும் இங்கு நடைபெறுவதுண்டு. வரலாற்றுக் காலம் முதல் இன்று வரை சிறியதொரு குடிலினுள்ளே, மிகவும் பழைமை வாய்ந்த பாலை மரத்தினடியில் விநாயகர் அமர்ந்துள்ளார். மூன்று வேளை பூசைகள் நடைபெறுகின்றன.

புராதன காலத்தில் கால்நடையாகச் செல்வோர் நலன்கருதி, சுமைதாங்கி, நன்னீர்க் கிணற்றுடன் கூடிய சிறிய மடங்கள் (வண்ணை - ஆறுகால்மடம், பருத்தித்துறை - தெருமூடிமடம் ஆகியன சிறந்த எடுத்துக்காட்டு; இன்றும் உள்ளன). அக்காலத் திண்ணை வீடுகள் முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவை, கால்நடையாகப் பயணிப்போரின் களைப்பினைப் போக்கி, ஓய்வெடுத்து செல்வதற்கு பெரிதும் உதவின.

இது போலவே, இன்றும் இந்த திருமுறிகண்டி பிள்ளையார் கோவிலும் அமைந்துள்ளது என்பதற்கு அப்பால் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதரத்தை, தொழில் வாய்ப்புகளை வழங்குகின்ற இடம் என்றே கூறமுடியும்

முழு உலகையும் ஆட்டிப்படைக்கும் கொவிட் -19, முறிகண்டியையும் முடக்கியுள்ளது. கோவிலில் மூன்று வேளை பூசைகளும் நடக்கின்றன. ஆனால், வழிபட யாருமில்லை; வழிப்போக்கர்கள் இல்லை; வர்த்தகர்கள் தமது கடைகளை மாதக்கணக்கில் மூடிவிட்டு, வாழ்வாதரமிழந்து நிற்கின்றனர்.

முறிகண்டிக் கோவிலைச் சூழவுள்ள பிரதேசத்தில் வாழ்வாதாரத் தொழிகளை மேற்கொள்பவர்கள், 1960ஆம் ஆண்டுக்கு முன்னதாக , 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேறி வசித்து வந்தன. 1969ஆம் ஆண்டு காலப்பகுதியில், இப் பிரதேசத்தில் வசித்து வந்தவர்களுக்கு 'திருத்தப்பட்ட காணி அபிவிருத்தி திட்டம்' என்னும் திட்டத்தின் கீழ், அவர்கள் வசித்த காணிகளுக்கான ஆவணங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

முறிகண்டிக்கு தெற்காக இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் கொக்காவில் என்ற இடத்தில், தொலைக்காட்சி பரிவர்த்தனை கோபுரம் ஒன்றை இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் 1970களில் அமைத்து, தொலைக்காட்சி அலைவரிசைகளை



வடக்கு பகுதிகள் அனைத்துக்கும் ஒளிபரப்பியது.

1977ஆம் ஆண்டு ஆவணி மாதமளவில் தென்பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது, தமிழ் மக்கள் கிளிநொச்சியை அண்டிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து, அங்கு தற்காலிகமாக குடியமர்ந்தனர். அக்காலப்பகுதியில், சௌமியமூர்த்தி தொண்டமான், வீ.ஆனந்த சங்கரி ஆகியோரின் ஒத்துழைப்புடன் இடம்பெயர்ந்து, சொந்தக் காணி இல்லாமல் இருந்த 40இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இப்பகுதியில் காணி வழங்கி குடியேற்றப்பட்டன.

அதன் பின்ளர், 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில், காணியின்றித் தங்கியிருந்த 150 குடும்பத்துக்கும் தலா இரண்டு ஏக்கர் வீதம் அரசாங்கத்தால் காணிகள் வழங்கப்பட்டன. 2003ஆம் ஆண்டில் காணியின்றி இருந்த 32 குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் அரசாங்க அதிபரால் நிலம் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏ9 வீதியின் கிழக்கேயுள்ள இக்கிராமத்தின் ஒரு பகுதியில், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு முக்கால் ஏக்கர் காணி வீதமும், 140 குடும்பங்களுக்கு அரை ஏக்கர் காணி வீதமும் காணிகள் வழங்கப்பட்டன.

இவை தவிர, 2010ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் அறிவியல் நகர், திருமுருகண்டி ஆகிய பகுதிகளிலும் பல்வேறு குடியிருப்புகள் நிறுவப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் அதாவது, 1969ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியில் குடியேறி வாழும் குடும்பங்களில் சுமார் 70 சதவீதமான குடும்பங்கள், இந்த முருகண்டி பிள்ளையார் கோவில் சூழலை நம்பிய தொழில் வாய்ப்புகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, கோவிலைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்கள் அதாவது, சிறிய கச்சான் கடைகள், பெட்டிக் கடைகள், தேநீர் கடைகள், கைவினைப் பொருட்கள், பிரதேச கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் என்று பல்வேறுபட்ட தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையாளர்களாகவும் அவற்றில் தொழில் புரிபவர்களாகவும்உள்ளனர்.

கடந்தபோன காலங்களில், நெருக்கடிகள் மிகுந்த ஒவ்வொரு காலகட்டத்திலும், இங்கே வசிக்கும் மக்கள் எல்லா வழிகளிலும் வீழ்ச்சி கண்டு வருகின்ற பிரதேசமாகவே இது காணப்படுகின்றது என உணருகின்றார்கள். அதாவது, 1989களின் பிற்பகுதியில் இருந்து இன்றுவரை, குறிப்பிட்ட காலம் வரை எழுச்சி பெற்ற பிரதேசமாகவும் அடிக்கடி வீழ்ச்சி கானும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.



1989ஆம் காலப்பகுதியில் முறிகண்டி பாதிக்கப்பட்டிருந்தது. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொக்காவில் பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாகவும் கிளிநொச்சி வரை மீண்டும் போர் காரணமாகவும் முருகண்டி முழுமையாகச் செயலிழந்தது. 1998ஆம் ஆண்டு காலப்பகுதி வரைக்கும் ஒரு பாதிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரைக்குமான புரிந்துணர்வு உடன்படிக்கை காலத்தில் மிகவும் களைகட்டிய ஒரு பிரதேசமாகக் காணப்பட்டது.

அதற்குப் பின்னர் இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில், இப்பிரதேசம் மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசமாகக் காணப்பட்டது. மீள்குடியமர்வுக்கு பின்னரான காலப்பகுதியில், வடக்கில் இருந்து தெற்குக்கும் தெற்கில் இருந்து வடக்குக்கும் மக்கள் படை எடுக்கும் போது, களைகட்டிய நகரமாக திருமுறிகண்டி காணப்பட்டது

இன்று, கொவிட் -19 காரணமாக முடங்கிய பிரதேசமாக நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்ட நிலையில் கானப்படுகின்றது. இந்த நிலையிலும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் தொடர்ந்தும் வரி அறவிடப்படுவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. 175இற்கும் மேற்பட்ட பலதரப்பட்ட கடைகளில், "ஒரு கச்சான் கடையில கூட, ஒரு கச்சான்கூட வியாபாரமில்லை" என்று வியாபாரிகள் ஏங்கும் நிலைகாணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# அழகிய ஆற்றங்கரையின் அருமை அறியாத அறிவீனர்கள்

## ஓட்டமாவடி ஆற்றில் மிதந்து வரும் மிருகக் கழிவுகளும் குப்பை மூடைகளும்

எச்.எம்.எம். பர்ஸான்







கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதிக்கு அழகு சேர்க்கும் ஒன்றாக ஆற்றங்கரை காணப்படுகிறது. இவ்வாறு இயற்கை அழகு மிக்க இந்த ஆற்றங்கரையை சிலர் நாசப்படுத்திச் செல்கின்றமை மீனவர்களையும் ஆற்றோரம் வசிப்பவர்களையும் பாதிப்படையச் செய்கிறது.

இந்த ஆற்றில் யாருக்கும் தெரியாமல் சிலர் மிருகக் கழிவுகளையும் குப்பைகளையும் வீசிச் செல்வதால் ஆற்றை நம்பி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் போது, வலைகளிலும் தூண்டில்களிலும் மிருகக் கழிவுகளும் குப்பைகளும் சிக்கிக் கொள்வதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் அவர்களது பெறுமதியான வலைகள் சேதமடைகின்றன.

அத்துடன், ஆற்றில் தொட்டில்கள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்வதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. மீன் தொட்டில்களில் குப்பைகள் அகப்பட்டு தொட்டில்கள் சேதமடைகின்றன என்று மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குப்பைகளும், மிருகக் கழிவுகளும் இவ்வாறு ஆற்றில் வீசப்பட்டு கிடப்பதால் துர்நாற்றம் காரணமாக தாம் மிகவும் சிரமப்படுவதாக கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் தாம் சிறுவர்களையும், வயதானவர்களையும் வைத்துக் கொண்டு சுவாசிக்க சிரமப்படுகிறோம் என்று கரையோர மக்கள் மேலும் தங்களது கவலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

அத்துடன் தாம் உணவு உட்கொள்ளும் போது துர்நாற்றம் காரணமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். எங்கள் வீடுகளுக்கு வரும் நபர்கள் கூட மூக்கைப் பொத்திக்கொண்டு தாமதிக்காமல் சென்றுவிடுகின்றனர் என்கின்றனர்.

இதனால் காலப்போக்கில் சுவாச நோய் உட்பட பல்வேறு நோய் தொற்றுக்கு உள்ளாகி விடுவோமோ என்று நாங்கள் அச்சப்படுகிறோம் என்று பாதிப்படைந்துள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த ஆற்றில் ஒவ்வொரு நாளும் மாடு, கோழி ஆகியவற்றின் கழிவுகள் மிதந்து வருகின்றன. அத்துடன் குப்பைகளும் மூடை மூடையாக மிதந்து வருகின்றன.

சிறுவர்கள் பயன்படுத்திய பம்பர்ஸ், பெண்கள் மாதவிடாய் காலத்தில் பயன்படுத்திய கோட்டக்ஸ் போன்ற அருவருப்பான பொருட்களை எல்லாம் இங்கு வீசிச் செல்கின்றனர் என்று கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் வசிக்கும் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்வதற்காக வேண்டி பிறர் வசிக்கும் சூழலை இவ்வாறு நாசப்படுத்தி அசிங்கப்படுத்தும் நபர்கள் இறைவனை அஞ்சிக் கொள்ள வேண்டும். யாரும் பார்க்கவில்லை என்பதற்காக வேண்டி இவ்வாறான வேண்டத்தகாத செயல்களை புரியக் கூடாது என்று தாம் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம் என்று இதனால் பாதிப்படைந்துள்ள மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆற்றங்கரைப் பகுதி பல வருடங்களுக்கு முன்னர் அழகிய முறையில் காணப்பட்டாலும் சில வருடங்களாக இது மிகவும் மோசமான முறையில் காட்சியளிக்கிறது என்று அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆற்றில் பிளாஸ்டிக் பொருட்களுடன் இரசாயனம் கலந்த பொருட்களை வீசிச் செல்வதால் மீன்கள் உயிரிழந்து காணப்படுவதாகவும், இவ்வாறு அருவருப்பான பொருட்கள் வீசப்படுவதால் அவ் ஆற்றில் பிடிக்கும் மீன்களை மக்கள் விரும்பாத நிலை காணப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தமது வாழ்வாதாரம் பாதிப்படைவதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இவ் அழகிய ஆற்றங்கரையை அழகுபடுத்தி அதனை பாதுகாக்க வேண்டிய பொறுப்புகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். ஆற்றின் அணைக்கட்டுகளை முறையாக அமைத்து மண் அரிப்பை தடுத்து சேதமடைந்துள்ள அணைக்கட்டுகளை புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன் மீனவர்கள் தங்களுடைய மீன்பிடிப் படகுகளை தரித்து வைக்க சிரமப்படுகின்றனர். மீனவர்களாகிய தாம் தொடர்ந்தும் இவ் ஆற்றில் மீன்பிடி தொழில்களை செய்ய குப்பை கூளங்கள் இல்லாத இறங்கு துறைகளை அமைத்து தமது தொழில் நடவடிக்கைகளை தடையின்றி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமாத்திரமின்றி, குறித்த ஆற்றங்கரை பகுதியை சில நபர்கள் போதைவஸ்து பாவிக்கும் இடமாகவும் மாற்றி வருகின்றனர். இவ்வாறு போதைப்பொருள் பாவிக்கும் போத்தல்களை கரையோரம் எறிந்துவிட்டு செல்வதால் அவை உடைந்து மீனவர்களுக்கு காயங்களை ஏற்படுத்திய சம்பவங்களும் நடந்துள்ளன.

இத்தகைய கீழ்மைத்தனமான நடவடிக்கைகள் குறித்து, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது, "மக்களின் பாதுகாப்புக்காக வேண்டி மண்ணரிப்பை தடுக்க, அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த பகுதியில் யாரும் குப்பைகள் போட வேண்டும் என்றும் காட்சிப் பலகையும் போடப்பட்டுள்ளது" என்றார்.

அத்துடன், குறித்த பகுதிகளில் ஒவ்வொரு நாளும் திண்மக் கழிவுகளை அகற்றும் இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. அதேபோன்று மாட்டு இறைச்சிக் கடை, கோழி இறைச்சிக் கடைகளின் கழிவுகளை முறையாக அகற்றுவதற்கு இயந்திரம் ஒன்றும் ஒவ்வொரு நாளும் சேவையில் ஈடுபடுகின்றது. இவ்வாறான வசதிகளை எமது பிரதேச சபை செய்து கொடுத்தும் அதனை சிலர் மீறிச் செயற்படுவது வேதனையளிக்கிறது என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான காரியங்களை செய்கின்ற நபர்கள் அதனை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறித்த செயல்களை செய்கின்ற நபர்கள் இனங்காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தவிசாளர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் நேசிக்கும் ஏராளமான மக்கள் மத்தியில் இவ்வாறான நபர்களின் வேண்டத்தகாத செயல்கள் இயற்கை வளத்தை அழித்தொழிக்கும் நிகழ்வாகத்தான் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இவ் அழகிய ஆற்றங்கரையை அழகுபடுத்தி அதனை பொதுமக்கள் தங்களது பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 11 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.